# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
நவம்பர் – டிசம்பர் 2024
ஆண்டு 5 ▲ இதழ் 03
விலை 250/-



## இவ்விதழின் ஆளுமை
# நௌஷாத் காரியப்பர்

# ஆண்கள் தினம்

உனக்கும் மனமுண்டு
உள்ளூரப் பொங்கிப்
பிரவாகிக்கும்
அன்பும் கனிவும் கூட
அதற்குண்டு
சட்டெனத் தெரிந்திடாத
சாத்வீகமும் கூடவே
அதற்குள் உண்டு
தந்தையாய் தமையனாய்
அன்பனாய் அன்பு மகனாய்
உன் வகிபாகங்கள் அனேகம்
தியாகத்தின் மறுபதிப்பாய்
ஆத்மார்த்தமான பாசத்தின்
உறைவிடமாய்
அதற்குள் நெகிழும்
அன்பின் பிறப்பிடமாய்
உன்னைக் கொண்டாட
வேண்டியிருக்கிறது
பெண்ணுக்கு நிகராய்
ஆணும் கொண்டாடப்பட
வேண்டியவனே
ஆழப் புதைந்திருக்கும் அன்பை
அத்தனை எளிதில்
வெளிப்படுத்தும் ஆற்றல்
குறைவாகிப் போனாலும்
உயர்ந்து நிற்கும் உன் குடும்பம்
சொல்லும் உந்தன்
தியாகத்தின் மேன்மையை
ஆண்கள் தினம்
அது ஆண்களுக்கு மட்டுமல்ல
அவனைப் போற்றும்
பெண்களுக்குமே தான்
கொண்டாடுவோம் அவன் புகழ் பாடி

**சுஸானா முனாஸ்**


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் - டிசம்பர் - 2024

ஆண்டு 5 ▲ இதழ் 03

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பளூஸ்

**வடிவமைப்பு:**
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.



படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamizh.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

*அன்பார்ந்த அனைவருக்கும் வணக்கம்!*

*இருமாதங்களுக்கொரு முறை மலரும் எமது முத்தமிழ் கலசம் இதழை, இம்முறை ஆண்களுக்காக மகுடம் சூடும் இதழாக பெரும்பாலான ஆக்கங்களைத் தர முனைந்திருக்கிறோம். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பதாகப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும், பெண்களின் ஆற்றல்கள், சாதனைகளின் பின்னணியில் இருந்து, அவர்கள் முன்னணியில் நிற்க கரம் கொடுப்பதும் ஆண்கள் தான். ஆனால் இதில் விதிவிலக்கானவர்களும் உண்டென்பதும் மறுக்கவியலா உண்மையே! வீட்டு மலர்களை மிதித்தபடி, காட்டு மலர்களைக் கொண்டாடும், மற்றும் மலர்கள்,மொட்டுக்களெனப் பாராமல் கசக்கி எறியும் ஒருசாராரையும் ஒருபுறம் ஒதுக்கி, பெண்களின் நலன்களுக்காகப் பாடுபடும் அத்தனை ஆண்களுக்கும் எமது வாழ்த்துகளையும் பிரார்த்தனைகளையும் தெரி வித்துக் கொள்வோம். அவர்களின் அளப்பரிய சேவைகளும் தியாகமும் வழமைபோல மௌனமாகவே கொண்டாடப்படக் கூடும். ஆயினும், அவர்களின் தியாகங்களும் கடின உழைப்பும் மனதுக்குள் ஆத்மார்த்தமாக கொலுவேற்றப்படும் என்பதும் திண்ணம். ஆண்களில் பெரும்பாலானவர்கள் தம் செயற்பாடுகள், கொண்டாடப்படவேண்டுமென எந்த எதிர்பார்ப்பும் வைத்துக்கொள்ளாத தயாள குணம் கொண்டவர்களே! அதனால் எப்போதும் கடமையில் கண்ணாக இருப்பதோடு கடந்தும் செல்வார்கள். எமை வாழ்த்தவில்லையென குறைபடவும் மாட்டார்கள். நிறைகுடமாய் துலங்கித் தோள் கொடுக்கும் அத்தனை ஆண்களுக்கும் நல்வாழ்த்துகளும் நன்றிகளும் உரித்தாகட்டும்!*

*நன்றி*

***வ.:.பிரா வ.:.பி***

*(பிரதம ஆசிரியர்)*



# ஆண் தேவதை

தேவதைகள் என்றதும் நினைவுக்கு வருவது சிறகு முளைத்து கூந்தல் பரப்பி வெண்ணிற ஆடை அணிந்த அழகிய ஒரு பெண் தான் என்றால் உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பெண்ணையும் தேவதையாக மாற்றும் ஒவ்வொரு ஆணும் தேவதை தான்.

விபச்சாரிக்கு ஆண்பால் இல்லை என்று கவலைப்பட்ட நான்தான் தேவதை என்ற சொல்லுக்கு ஆண்பால் இல்லை என்று கவலைப்பட்டு இருக்கிறேன். ஏனென்றால் ஒவ்வொரு வீட்டிலும் தேவதைகள் இருக்கின்றார்கள் ஆண் என்ற பெயரில்.

இங்கே நான் எல்லா ஆண்களையும் பற்றி பேசவில்லை. 'நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யட்டும் மழை.'

மீசை முளைக்கும் முன்னரே ஆசை வந்து விடுகிறது ஆண்களுக்கு உழைப்பின் மீது. உழைக்கின்ற மக்களால் தான் பூமி சுற்றுகிறது. ஏனென்றால் பெரும்பாலும் ஆண்கள் தனக்காக உழைப்பதில்லை.

ஒரு பெண்ணின் உழைப்பினால் ஏற்படும் களைப்பு பற்றி, பணி செய்யும் இடத்தில் ஏற்படும் துஷ்பிரயோகங்கள் பற்றி, சுரண்டல்கள் பற்றி, ஒரு உழைக்கும் ஒரு பெண்ணுக்கு வீட்டில் கிடைக்காத ஒத்துழைப்புக்கள் பற்றி கட்டுரை கட்டுரையாக எழுத் தெரிந்த எமக்கு இவை அனைத்தும் ஆண்களுக்கும் இருக்கின்றன என்று ஒரு வரி கூட எழுத மனது வருவதில்லை. காரணம் ஆண்கள் எதையும் . வெளிக்காட்டிக் கொள்வதில்லை.

தான் பெற்று வளர்த்ததை ஆயிரம் முறை சொல்லிக் காட்டும் தாயை போல ஒரு தந்தை தான் அடைந்த சிரமங்களை சொல்லிக் காட்டுவதில்லை. வேலை செய்யும் இடங்களில்

தனக்கு இழைக்கப்படும் அநீதிகளை கூட தன் குடும்பத்தினருக்காக மறந்து பொறுமையாக இருக்க ஆண் களால் முடிகிறது.

தனக்கு மேல் உள்ள அதிகாரம் படைத்தவர்களால் அடிமைப்படுத் தப்படும் போது கூட தன் மனைவி மக்களின் முகத்துக்காக சுயமரி யாதையை இழந்து பணி புரியும் ஏராளமான ஆண்கள் இருக் கிறார்கள்.

முதிர் கன்னிகள் போல முதிர் ஆடவர்களும் இருக்கிறார்கள். அனேகமாக அவர்கள் தன் சகோத ரிகளுக்காக திருமண வயது தள்ளிப் போனவர்களாகவே இருப்பார்கள்.

ஒரு பெண்ணுடைய அன்பு பூக்களை போல வெளியே அழ காக தெரிகின்றது. ஆனால் ஒரு ஆணுடைய அன்பு வெளியே தெரி யாத வேர்களை போல் அத்தி யாவசியமான ஒன்றாக இருக்கிறது.

ஒரு தாயிடம் கிடைக்கும் பாசம் போல ஒரு தந்தையிடம், ஒரு கண வனிடம், ஒரு சகோதரனிடம், ஒரு மகனிடம் கிடைக்கும் பாதுகாப்பும் இங்கே ஒவ்வொரு உயிர்களுக்கும் அவசியம் .

தனது குடும்பத்திற்கும் தனது தொழிலுக்கும் இடையில் ஓடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆண் களும் தியாகிகள் தான்.

ஒவ்வொரு உயிரின் பிறப்பிலும் சரி வளர்ப்பிலும் சரி பெண்ணின் பங்கை போல் சரிசமமாக ஆணின் பங்கும் அவசியம். ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு பின்னாலும் நிச்சயமாக பேசப்படாத ஒரு ஆண் இருப்பான்.

ஆயிரம் அலைகளை மனதில் சுமந்து கொண்டு ஆழ்கடலைப் போல அமைதியாக தெரியும் ஆண் களை விட அழகாகி விடுமா அந்தக் கடல்?

பாறையைத் துளைக்கும் வேர்கள் போல அந்த முரட்டுத் தனமான உடம்புக்குள் இருக்கும் பாசத்தை பிரித்து அனுபவித்து இருக்கிறீர்களா?

ஆண்கள் பெண்களை புரிந்து கொள்வதில்லை என்று சில பெண் கள் குறைபட்டு கொள்கிறார்கள்.

ஆண்கள் புரிந்து கொள்ளாமல் இல்லை. புரிந்து கொண்டும் செய் வதற்கு எதுவும் இல்லாத ஒரு கட் டத்தில் அவன் இருப்பான் .அல் லது அதற்குரிய தீர்வினை அவன் பெற்றுக் கொடுப்பதற்கு சிந்தித்துக் கொண்டிருப்பான்.

பிறப்பிலிருந்து இறப்பு வரை உங்கள் பெயருக்கு முன்னே இருப் பது தந்தை என்ற ஆணின் முதல் எழுத்துக்கள்தான். பாதுகாப்புக்காக ஒவ்வொரு பெண்ணும் தங்கள் பெயரின் பின்னால் போட்டுக் கொள்வது கணவன் என்று ஆணின் பெயர்தான்.

அல்லாஹ் தன் திருமறையில், ‘உங்களையும் உங்கள் மனைவி மக் களையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்’ என்று

*குறிப்பிட்டிருக்கிறான். பெண்களை நரகத்திலிருந்து பாதுகாப்பதற்காக கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் ஆண்கள்.*

*ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபா தோழர்களிடம், 'மனிதனுக்கு மனிதன் சுஜுது செய்வதாக இருந்தால் பெண்களைத் தம் கணவன்மாருக்கு சுஜுது செய்ய ஏவியிருப்பேன்' என்று கூறியுள்ளார்கள்.*

*ஒவ்வொரு பெண்ணுக்கும் அவளுக்குரிய ஆண் பொறுப்பானவன். பெறுமதியானவன். முக்கியமானவன்.*

*ஹலாலான ஆண்களின் அன்பைப் பெற்ற பெண்கள் பெரும் பாக்கியசாலிகள்.*

**ஜுவைரியா சதீக்**
தம்பாளை–பொலன்னறுவை

# ஆண்கள்

கருவறையில் பத்து மாதம் தவழ்ந்து
தாய் மடியில் வளர்ந்து நிமிர்ந்து
தாரமாய் ஒருத்தியை கரம் பிடித்து
தரணியில் உலாவரும் பிறை நிலவு

அன்பின் உணர்வில் உயிர் கொண்டு
அன்னையை மனதில் பற்றிப் பிடித்து
கரம் பிடித்தவளை நெஞ்சில் சுமக்கும்
காலச் சுழற்சியானவன் ஆண் மகன்

பாசம் வைப்பதில்
மயிற்பீலியானவன்
வேஷம் போட்டால் வேடிக்கை
காட்டுபவன்
தாய்க்கு மகனாய்
கடமைக்கு கடன்காரனவன்
பிள்ளைக்குத் தந்தையாய்
கடனில்லாக் கடமைக்காரன்

உழைத்து வாழ்ந்து உயர வைப்பவன்
உரமூட்டியானவன் உறவின்
உயிரானவன்
தொழிலாளியவன் தொடர்
தோல்வியை துடைப்பவன்
துயரை தூரமாக்கி வைக்கும்
பாட்டாளியவன்

உரிமையின் உடமையானவன்
உறவின் ஆசானானவன்
உணர்வின் இரத்தம்
அவனில்லையென்றால் சத்தம்

யுத்தமாக மாறி பாதுகாப்பு அற்று
பாதை மாறி
பாவிகளாகி பரிதவிப்பார்கள்
பெண்களின் கண்கள்
அவர்களே ஆண்கள்

**பானு ஜிப்ரி**
சாய்ந்தமருது

# உறைக்குமா உம்மா நானுரைப்பது?

வருடம் ஒரு தடவை ஒக்டோபர் ஒன்றில்
வண்ண வண்ண பலூன்களுடன்
வகை வகையாய் கொண்டாட்டம்
வாய்நிறைந்த வாழ்த்துகள்

பரிசுகளும் வாழ்த்துகளும் உன்
வாரிசுக்குப் போதுமாகுமா
நின்றுதான் ஒரு நிமிடம்
நானுரைப்பதைக் கேட்பாயா

மணம் செய்த மறு மாதம்
உன் வயிற்றில் நான் வந்து விட்டேன்
மனம் நிறைந்த மகிழ்ச்சியுனக்கு
மற்றவர்க்கும் அவ்வாறே

ஓடினார் என் வாப்பா வீஜி தேடினார்
பெயரைத் தெரிவு செய்யவும்
பெரும் ஓட்டம் ஓடினார்

தேடினாய் அம்மா நீ
தொலைதூர முன்பள்ளி
அனுப்பினாய் முதல் பள்ளி
ஆட்டோவில் எனை ஏற்றி

பின்னேரம் குர்ஆன் வகுப்பு
அது முடிய டியூசன் வகுப்பு
தூக்கம்தான் என்றாலும்
துரத்தியே விட்டிடுவாய்

ஆண்டு மூன்று வந்துவிட்டால்
அலுத்துவிடும் குர்ஆன் வகுப்பு
அறுபது தரம் முழுக்குர்ஆனும்
அழுதழுதே ஓத வைப்பாய்

ஐந்தாம் ஆண்டு எட்டிவிட்டால்
அய்யோ நாங்கள் பாவமம்மா
ஐந்தாறு டியூசன் என்று
அரக்கப் பரக்க அனுப்பி விடுவாய்

ஆறு முதல் பதினொன்றுவரை
ஐம்பது ஆசிரியர்தான் எமக்கு
ஐம்பதாயிரம் மாதம் கொட்டி
அறுபது வகுப்பு செல்லவைப்பாய்


அடுத்தவரின் பிள்ளை போல்
நான் படிக்க முடியுமாம்மா
ஒவ்வொரு பிள்ளைக்கும்
ஒரே மூளை இருக்காதம்மா

அடுத்த வீட்டில் புகழ் பாட
நான் தானுனக்கு கிடைத்தேனா
சிறு பிள்ளை நானென்று
சற்றேனும் எண்ணினாயா

கல்வியைக் கசப்பாக்கி
அதையெமக்கு வெறுப்புமாக்கி
கடைசியிலே நான் இங்கு
கஷ்டப்படல் நல்லதாம்மா

பின்னேரம் சிறு நேரம்
விளையாட அனுப்பம்மா
என் சிறிய மூளைக்கு
ஓய்வொன்று தா உம்மா

வாழ்வுக்கே படிப்பம்மா
படிப்பு மட்டும் வாழ்வல்ல
படிப்பு என்ற ஒன்றாலென்னை
பைத்தியமாய் ஆக்காதம்மா



முப்லிஹா பிர்துவ்ஸ்
காத்தான்குடி



# மலார்ஸ்கீர்த்

## திறக்கப்பட்ட அனடோலிய கதவுகள்

செல்ஜூக்கிய சிற்றரசின் இரண்டாம் ஆட்சியாளராக முஹம் மத் அல்ப் அர்ஸலான் எனும் இயற் பெயரைக் கொண்ட சுல்தான்

அல்ப் அர்ஸலான் அவர்கள் பதவியேற்றார். அவரது ஆட்சிக் காலத்தில் கி.பி. 1071 இல் நடந்த மலார்ஸ்கீர்த் எனும் மிக முக்கியமான போரானது துருக்கிய முஸ்லீம்களுக்கு அனடோலியாவின் கதவுகளைத் திறந்து விட்டது மாத்திரமல்லாது, அவர்களை இன்றளவும் அப்பகுதிகளிலிருந்து அகற்ற முடியாதபடி அப்போர் மாபெரும் விளைவை ஏற்படுத்தியது எனலாம். அவரது தூரநோக்குச் சிந்தனையும் அரசியல் மதிநுட்பத்துடன் கூடிய அதியுயர் போர்முறை உத்திகளும் ஒருங்கே சேர்ந்து அவரின் வீரத்தை அலங்கரித்தது. இவர் குராஸான் ஆட்சியாளரான 'ஷாஹ்ரி பே' அவர்களது புதல்வரும் சுல்தான் 'துஃரூள் பே' அவர்களின் மருமகனும் ஆவார். அல்ப் அர்ஸலான் அவர்கள் அவரது தந்தையின் மறைவிற்குப் பிறகு குராஸானின் ஆட்சிப் பொறுப்பையும் அதேசமயம் அவரது தந்தையின் இளைய சகோதரரான சுல்தான் 'துஃரூள் பே' தனக்கு பின்னால் ஓர் வாரிசை விட்டுச்செல்லாது மறைந்ததன்

காரணத்தால் அல்ப் அர்ஸலான் அவர்கள் செல்ஜூக்கிய சிற்றரசின் அரியணையை அலங்கரித்து ஏக காலத்தில் குராஸான் மற்றும் செல் ஜூக்கிய நிலப்பரப்புக்களை ஆட்சி புரிந்த முதல் செல்ஜூக்கிய சுல்தா னாகவும் உருவெடுத்தார். இந்த நகர்வின் வாயிலாக செல்ஜூக்கிய சிற்றரசை ஓர் பரந்த சாம்ராஜ்ய மாய் பரிணமிப்பதற்கான முதல் அத்தியாயத்தை அவர் வரைவித்தார்.

சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்களது 42வது வயதில் நடந்த மலார்ஸ்கீர்த் போரில் தன் படையை விட நான்கு மடங்கு அதி கமான பைசாந்தியப் படையுடன் மோதி வெற்றி கொண்டதன் ஊடாக இவ்வுலக வரலாற்றின் போக் கையே மாற்றிக் காட்டினார். போர் யுக்திகளில் அவருக்கிருந்த அதீத புலமை காரணமாக அவர் பெற்ற இவ்வெற்றியானது இன் னும் பல நூற்றாண்டுகளுக்கு பேசப்படும் என்பதே நிதர்சன மான உண்மையாகும். இப் போரா னது பைசாந்தியர்களால் அன டோலிய எல்லைப்புறங்களில் முகாமிடுவதன் வாயிலாக செல் ஜூக்கியர்களுக்கு எதிரான போரை அறிவித்தனர். மேலும் அவர்களது இந்த நடவடிக்கைக்கு எதிராக செல்ஜூக்கியர்கள் தரப்பிலிருந்து எடுக்கப்பட்ட பதில் நடவடிக்கையே மலார்ஸ்கீர்த் எனுமிடத்தில் நடந்த இப்போருக்கான இரத்தி னச் சுருக்கமாகும். இப்போரை செல்ஜூக்கியர்களால் தவிர்க்க முடியாததாக இருந்த அதேசம யம் தம்மையும் அப்பாசியக் கலீ பாவின் தலைமையில் இருந்த இஸ்லாமிய உலகையும் காக்கும் கடைசி வாய்ப்பாகவே அவர்கள் இப்போரைக் கருதினர் என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பைசாந்தியத் துருப்புக்களின் இவ்வாறான நடவடிக்கைகளை அறிந்த சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் அலப்போவிலிருந்து உட னடியாக அனடோலியாவி லுள்ள அஹ்லாத்தை அடைந்ததும் அவ ருக்கு, பைசாந்தியப் பேரரசர் ரோமானோஸ் டியோஜன் IV தன் 200,000 வீரர்களுடன் மலார்ஸ் கீர்தைக் கைப்பற்றிவிட்டார்' எனும் தகவல் கிடைத்த மறுகணமே சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் சுமார் 50,000 - 60,000 வரையான வீரர்களுடன் தம்மை விட எண் ணிக்கையில் அதிகமாக பைசாந்தியப் படைகளை எதிர்கொள்ள காற்றின் வேகத்தில் அஹ்லாத்திலிருந்து மலார்ஸ்



கீர்தை நோக்கி விரைந்தார். அவர் மலார்ஸ்கீர்தை அடைந்ததும் போரைத் தவிர்க்கும் வகையில் பைசாந்தியப் பேரரசருக்கு சமாதானத்திற்கான அழைப்பை விடுத்தார். ஆயினும் அந்த அழைப்பை பேரரசர் ரோமா னோஸ் டியோஜனால் ஏளனமாக நோக்கப்பட்டு பின்னர் மறுக்கப் பட்டது.

சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் போருக்கான இறுதி ஆயத் தங்களை மதிப்பாய்வு செய்கையில் வீரர்களின் மனதில் தோல்வி பயத்தைக் கண்ணுற்றார். உடனே அவர் தன் கூடாரத்தை நோக்கி விரைந்து தன் ஆடைகளைக் களைந்து விட்டு சட லங்களுக்கு அணிவிக்கப்படும் கபன் ஆடையை அணிந்தவராய் தன் வீரர்கள் முன் கம்பீரமாக தோன்றி அவர்களை ஊக்கப்படுத்தும் வகை யில் அவர் ஓர் உணர்வுபூர்வ மான குத்பா பேருரை ஒன்றினை போர் நடந்த அப்புனித நாளான வெள்ளிக்கிழமையன்று அவர் நிகழ்த் தினார்.

அந்த உரையில் சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் குறிப்பிட்ட தாவது,

'ஒன்று நான் வெற்றியடைவேன் இல்லையேல் நான் உயர்தரமான ஜன்னத்தை அடைந்துக் கொள் வேன், ஓர் உயிர்த்தியாகியாய். உங்களில் எவர் என்னைப் பின்பற்றி வர நாடுகிறீர்களோ, அவர்கள் என்னோடு வரட்டும்.

எவர் இங்கிருந்துச் செல்ல விரும்புகிறீர்களோ, அவர்கள் தாரா ளமாக செல்லட்டும்.

இங்கே எந்தவொரு சுல்தானோ அல்லது கட்டளையிடும் தள பதியோ இல்லை.இன்று நானும் உங்களில் ஒருவனே! நான் உங்களோடு போராடும் ஓர் சக காஸி (யாகிய போராளி) ஆவேன். நான் என்னுயிரைத் தியாகம் செய்யவே விரும்புகிறேன்.

எவர் என்னைப் பின்பற்று கின்றனரோ, மேலும் எவர் ஷஹீத் எனும் வீரமரணம் எய்தி தம் இன்னு யிரை துச்சமாக மதித்து அந்த ஏக இறைவனாம் அல்லாஹ்வின் பாதை யில் அர்ப்பணிக்கின்றனரோ, அவர் கள் அந்த உயர்தரமான ஜன்னத்தை அடைத்துக் கொள்ள; அதில் தப்பிக் கொள்பவர்களோ 'காஸி' எனும் உயர் அந்தஸ்தை அடைந்தும் கொள்வர்.

மேலும் எவர் இங்கிருந்து வெளியேற நாடுகின்றனரோ, அவர்கள் நாளைய மறுமைநாளில் நரக நெருப்பையும்; இன்றைய இவ்வுலகில் இகழ்வையும் எதிர்க் கொள்ளத் தயாராவீர்களாக!

ஒருவேளை நான் களத்தில் வீழ்ந்தால், வீழ்ந்த அவ்விடத்திலேயே என்னை அடக்கம் செய்துவிட்டு இந்த அறப் போராட்டத்தை என் புதல்வனாகிய மாலிக் ஷாஹ்வின் தலைமையின் கீழ் தொடர்வீர்களாக'

எனும் உணர்வுபூர்வமான உரையின் பின்னர் பைசாந்தியரை எதிர்க்க சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் தன் சிறு படையோடு மலார்ஸ்கீர்த் போர்க்களத்தினுள் புகுந்தார். அவரின் தலைமையின் கீழிருந்து வீரர்கள் வீறுகொண்டு போராடினர். அதன் விளைவாக வரலாற்றிலே இதற்கு முன்னும் பின்னும், ஏன் என்றுமே நடவாத ஓர் நிகழ்வாக ஓர் பைசாந்தியப் பேரரசன் போர்க் கைதியாக்கப் பட்டதுடன் மலார்ஸ்கீர்த் போரில் சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் வென்றதன் வாயிலாக அன்டோனியாவின் கதவுகளை துருக்கிய முஸ்லீம்களுக்காக திறந்தும் விட்டார்.

சுல்தான் அல்ப் அர்ஸலானின் முன்னிலையில் போர்க்கைதியான பைசாந்தியப் பேரரசர் ரோமானோஸ் டியோஜன் IV அவர்கள் கொண்டுவரப்பட்டார். அப்போது சுல்தானுக்கும் பேரரசருக்குமிடையில் இவ்வாறானதோர் உரையாடல் நிகழ்ந்தது.

**அல்ப் அர்ஸலான்:** ஒருவேளை நான் உங்களது நிலையில் இருந்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?

**ரோமானோஸ் டியோஜன்:** ஒருவேளை நான் உங்களைக் கொன்றிருப்பேன். அல்லது உங்களை ஓர் கண்காட்சிப் பொருளைப் போல் கொன்ஸ்தாந்துநோபிளில் பாதைகளில் காட்சிப்படுத்தியிருப்பேன்.

**அல்ப் அர்ஸலான்:** நிச்சயமாக எனது தண்டனை (இறைவன் புறத்தில்) இதைவிடப் பயங்கரமானதாகும். ஆதலால் நான் உங்களை மன்னிப்பதுடன் விடுதலையும் செய்கிறேன்.

பேரரசர் ரோமானோஸ் டியோஜன் IV இவ்வாறானதோர் பதிலை அளித்தும் இருந்தும் சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் அவரை மன்னித்து மிகவும் கண்ணியமான முறையில் நடத்தினார். அவருடன் அமைதிக்கான பேச்சுவார்த்தையை மீண்டும் துவங்கினார். பேரரசருக்கு அரச மரியாதையளித்து அவரின் கூடாரத்தை தன் கூடாரத்திற் கருகில் அமைக்குமாறும் பணித்தார். இறுதியில் 1,500,000 தங்க நாணயங்களை தன் விடுதலைக்கான பணயத் தொகையாய் செலுத்துவதாக பேரரசர் ரோமனோஸ் டியோஜன் IV அவர்கள் வாக்களித்தார். அவர் மனதினுள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லீம்கள் மீது மிருந்த தப்பபிப்ராயங்களைக் களைந்தெறிந்துவிட்டு பூரண நல்லெண்ணத்துடன் தலைநகரான கொன்ஸ்தாந்து நோபிளை அடைந்தார். ஆயினும் அங்கு அவர் சென்றவுடனே அவரின் பதவி உடனடியாக பறிக்கப்பட்டது. மேலும் அவர் தன் உச்சசக்தியைப் பயன்படுத்தி சேகரித்த தொகையான 300,000 தங்க நாணயங்களை பின்வரும் வாசகங்கள் கொண்ட கடிதத்துடன் சுல்தான் அல்ப் அர்ஸ லானுக்கு அனுப்பிவைத்தார்.

*'ஓர் பேரரசனாக இருந்த போது நான் உங்களிடம் பணயத் தொகையாக ஒன்றரை மில்லியன் தங்க நாணயங்களை தருவதாக வாக்களித்தேன். ஆனால் நானோ இப்போது பதவி நீக்கம் செய்யப்பட்டு ஏனையோரைச் சார்ந்திருக்கும் ஓர் சாதாரண மனிதனின் நிலைக்குத் தள்ளப்பட்டும் விட்டேன். ஆதலால் என்னிடம் இருக்கும் அனைத்தையும் நான் உங்களிடம் அனுப்பி என் நன்றியுணர்வை தெரிவிக்கிறேன்.'*

*இக்கடிதத்தை வாசித்ததும் ரோமானியர்களின் வரலாற்றில் உதித்த ஓர் சிறந்த தளபதிக்கு ஏற்பட்ட நிலையையறிந்து மனம் இளகிய சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் மீதித் தொகையை கருணையடிப்படையில் தள்ளுபடி செய்து பணய ஒப்பந்தத்தையும் ரத்து செய்தார். பின்னர் உயர் சபையினரால் பேரரசன் ரோமானோஸ் டியோஜன் **IV** பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது கண்கள் குருடாக்கப்பட்ட நிலையில் புரோட்டி தீவிற்கு நாடு கடத்தப்பட்டார். பின்னர் அவர் நாடு கடத்தப்பட்ட அன்றைய நாளே இவ்வுலகை விட்டும் பிரிந்தார்.*

*இப்போர் நடந்து 11 மாதங்கள் கழித்து செல்ஜூக்கிய அரசுக்கெதிராக கிளர்ந் தெழுந்த யூசுஃப் எனும் தளபதியைக் கைதுசெய்து சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்களின் முன்னிலையில் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக கொண்டு வரப்பட்டான். அச்சமயம் அவனது விஷம் தோய்க்கப்பட்ட நயவஞ்சகத்தின் குறு வாளானது சுல்தானைப் பதம் பார்த்தது. அதன் காரணமாக சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் மிக இளம்வயதிலேயே அதாவது அவரது 43வது அகவையில் படுகாயமடைந்த அவர் சிலமணி நேரங்களிலேயே இறையடி சேர்ந்தார். அவரின் மறைவிற்குப் பின்னர் 17 வயதேயான அவரது புதல்வனான மாலிக் ஷாஹ் அவர்கள் செல்ஜூக்கிய சுல்தானாக பதவியேற்றதுடன் தந்தையின் வழியைப் பின்பற்றி அனடோலியப் பகுதிகளினுள் ஆழமாக ஊடுருவி இராச்சியத்தின் எல்லைப்புறங்களை மேன்மேலும் விரிவுபடுத்தினார்.*

*சுல்தான் அல்ப் அர்ஸலான் அவர்கள் அனடோலியாவின் கதவுகளை திறந்து அதனை துருக்கிய முஸ்லீம்களின் புதுதாயகமாக மாற்றி பிற்காலத்தில் அதே துருக்கிய முஸ்லீம்கள் பல வெற்றிகளை ஈட்டியதற்கும் மேலும் அதே அனடோலிய பகுதிகளிலிருந்து இவ்வுலகை சுமார் 6 நூற்றாண்டுகளுக்கு மேல் நீடித்து நீதியை நிலைநாட்டிய உஸ்மானிய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதற்கும் இந்த மலார்ஸ்கீர்த் போரினால் பெறப்பட்ட வெற்றியே அடித்தளமிட்டது என்று கூறினால் அது என்றும் மிகையாகாது.*

**கன்ஜூல் மஹ்ரஜபீன்**

# ஆண் தேவதை

பெண்களில் மட்டுமே
பெருமைகள் உண்டென
பிதற்றும் மனிதமே
பிழையது கேளீர்
உண்மையை உரைக்கிறேன்
உரத்துச் சொல்கிறேன்

எந்தன் தேவதை
இகத்தினில் உண்டென
கனவுகளை நனவாக்க
காரிகையை கரைசேர்க்க
நினைவினிலே நிறைந்தவனோ
நிஜமன்றி யாரறிவார்

அன்பிற்காய் ஏங்கி
அடிமையென மாறி
கறிச்சட்டி பானையோடு
கதைபேசும் பெண்ணை
மண்பேச வைக்க
மகிழ்ந்திடவே நிற்க
கண்பார்த்து நின்ற
கர்ணனவன் என்று
தாயன்பை தந்து
மாயனென வந்து
மாற்றங்கள் செய்து
மனதினையே கொய்து
ஏற்றங்கள் காட்டி
தேற்றல்கள் கூட்டி
ஆற்றல்கள் ஊட்டி
அவையினிலே ஏற்றி
மா மேதையென மாற்றி
மறுமலர்ச்சி காட்டி
நங்கையெனை வென்ற
நல்லவனைக் கண்டு
குகனவனும் சொக்க
கூற்றுவனும் தோற்க
இகத்தினையே வெல்வேன்
இணையவனைப் பற்றி

—கவிமகள் ஜெயவதி

## உழைப்பில் உயர்வே

உழைப்பினிலே நிலைத்தவரே
வாழ்வினிலே உயர்ந்திடுவர்
உண்மைச் சொல்லே!

உழைப்பினையோ
நீக்கிவிட்டால் வாழ்வினிலே
தாழ்ந்திடுவர்
உண்மைச் சொல்லே!

மழைப்பொழியும் நாள்களிலே
புத்துயிரும் பெற்றிடுமே
மண்ணின் வாழ்வே!

மழைப்பொழிவை
நீக்கிவிட்டால் தன்னிலையோ
தாழ்ந்திடுமே
மண்ணின் வாழ்வே!

வாழ்வியல் கவி
**சா.நாகூர் பிச்சை**
துபாய்

# பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களைப் பொறுப்புடன் கையாளுவோம்

திருமதி.சித்தி சபீனா வைத்துள்ளாஹ்



இன்று மனித வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் இரண்டறக் கலந்து, பல நன்மைகளைப் புரிந்து கொண்டு தான் இருக்கின்றன என்றாலும், அவற்றை உபயோகித்த பின்னர், அவை உக்குவதற்கு பல நூறு ஆண்டுகளை எடுக்கின்றன என்பது தான் மனித இனத்துக்கு மாபெரிய துரதிஷ்டமாகவும் சவாலாகவும் உள்ளது.

ஆரம்பத்தில் விளையாட்டுப் பந்துக்கெனக் கண்டு பிடித்த மனிதன், இராணுவத்தின் தலைக் கவசம் பரசூட் என விரிவுபடுத்தினான். பின்னர் அவை, மருத்துவத்துறையிலும் அத்தியாவசியப் பொருட்களாக மாறிவிட்டன. மேலும், கடலுக்கடியிலே இண்டர்நெட் கேபிளாகவும் மிகவும் பயன் தருகிறது. அத்துடன், மின்சுற்றுக்கான குழாய்கள், நீர் வடிகாலமைப்புக்கான குழாய்கள், மற்றும் இலக்ட்ரோனிக் உபகரணங்கள் எனப் பல பயன் தந்து, மனிதத் தேவைகளுடன் இணைந்துள்ளன. மேலும், மீன்பிடி உபகரணங்களாக, பொருட்களைப் பொதியிடும் பொருட்களாக கொள்கலன்களாக, நம் கைகளில் நாளாந்தம் தவழும் குடிநீர்ப் போத்தல்களாக, என இன்னோரன்ன உபகாரணங்களாக வலம் வருகின்றன.

என்றாலும் அவை, கழிவுகளாகும் போது கடலிலும் நதியிலும் நிலத்திலும் தேங்குகின்றன. நீர் நிலம் காற்று என்பவற்றை மாசுபடுத்துகின்றன. அதன் மூலம் உயிரிகளின் ஆரோக்கியம் கெடுகின்றது. இவற்றைக் கடலில் மீனும் நிலத்தில் மானும் உண்டு



மாண்டு விடுகின்றன. அத்தோடு, உணவுப் பொதியிடலில், மற்றும் குடிநீர் போத்தல்களில் இவை, வெப்பமேறும் போது, காலாவதி யாகும் போது, உணவுடனும் நீருடனும் தன் மூலகங்களை கலந்து விடுகின்றன.

சூழலில் இவற்றை எரிக்கும் போது வெளியேறும் டையொக் சின் எனும் வாயு மூலம் சுவாச நோய் தோல் நோய் என்பன ஏற்படுகின்றன. மேலும், தொடர்ந்து பிளாஸ்டிக் போத்தல்களில் குடிநீரைச் சேமித்து வைத்து அருந்தும் பொழுது புற்றுநோய் ஏற்படுகிறது. அரை நூற்றாண்டு காலமாக மனித வாழ் வுடன் பின்னிப் பிணைந்துள்ள இவை துகள்களாகி, மைக்ரோவை விடவும் நனோ அளவுகளில் நீர் நிலம் காற்றுடன் கலக்கின்றன.

மக்கள் இவற்றை உபயோ கித்த பின் முறையாக மீள்சுழற்சி செய்தால் அதன் தீங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள் ளலாம்.

அதற்காகப் பாடசாலை மாண வர்களின் மத்தியில் இருந்தே விழிப் புணர்வை ஊட்டி வரவேண்டும். மேலும் பெற்றோர்களுக்கும் இவற் றின் மூலம் சந்ததியைக் காக்க விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

அத்தோடு கழிவகற்றும் முறையி னையும் அறிமுகப்படுத்தலாம். தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கவும் விளம்பரங்களைக் கொடுக்கலாம்.

இவ்வாறு ஒன்றுபட்டு உழைத் தால் இந்தப் பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு காணலாம் என்பது எனது கருத்தாகும். எந்த வகையிலும் இவற்றின் பாவனையைக் குறைத்தலோ, பாவனையை முற்றாக தவிர்த் தலோ முடியாத காரியமாகும். எனவே, தொன்கணக்கில் சேரும் இக்கழிவுகளை மீள்சுழற்சி செய்து பயன்படுத்துவோம். வருங்காலச் சந்ததியின் நன்மைக்காகச் சிந்திப் போம்.

# தலைமகன் நீரே

தந்தையாய் முதலில்
அறிமுகமானாய்
தன்னலம் இல்லா அன்பை
வாரி நீ தந்தாய்
கண்ணிமை போல
எனைக் காத்து
காவலனாய்நின்றாய்
கல்விக்கு உரமிட்டு
வழிகாட்டி விட்டாய்
உன் துயர்கள் எங்களிடம்
நீ மறைத்து வைத்தாய்
இளவரசி போல்
என்னைப் போற்றி
சீராட்டி வளர்த்தாய்


தனயனாய் என்னில் அறிமுகமானாய்
தம்பியுடையான் என்று
கர்வமும் தந்தாய்
சண்டைக்கு குறைவில்லை
சந்தோசம் பகையுமில்லை
பாசங்கள் பஞ்சமில்லை
வேஷங்கள் இருந்ததில்லை
ஒரு கூட்டில் வளர்ந்தோம்
ஒற்றுமையில் சிறந்தோம்

கணவனாய் என்னில்
அறிமுகமானாய்
காதலுடன் என்னை
கரம் பற்றிக் கொண்டாய்
இன்பத்திலும் துன்பத்திலும்
துணையாக நின்றாய்
ராணியாய் என்னை வைத்து
நீ மகிழ்ந்து கொண்டாய்
எமக்காக நீ உழைத்து
ஓடாகிப் போனாய்
குடும்பத்தின் நலன் காக்க
உன்னையே நீ மறந்தாய்

மகனாய் என்னில்
நீ அறிமுகமானாய்
தாய் என்ற மகுடத்தால்
அலங்காரம் செய்தாய்
மழலை உன் மொழிகளில்
மயக்கங்கள் தந்தாய்
வாலிப வனப்பினில்
பூரிக்க வைத்தாய்
வெற்றிகள் குவித்தென்னை
பெருமிதம் கொள்ளச் செய்தாய்
சான்றோனாய் உயரத்தில்
பெரிதுவக்கச் செய்தாய்

ஆண்மகன் என்னும்
பிறவி கொண்டோரே
பெண்மையைக் காத்திடும்
கவசங்கள்தானே
உழைத்தே மாளும்
மாணிக்கத் தேரே
போற்றும் வீட்டின்
தலைமகன் நீரே!

**ஷிபானா fபதா**
பதுளை





# தலை மகனாய் அவன்

**சிறுகதை–றஹீமா இன்ஸார், மீராவோடை**



வானம் மழையைக் கடுமையாக பொழிந்து கொண்டே இருந்தது. மழை முகில் களை கிழித்து கொண்டு சூரிய கிரகணங்களால் வெளியே வர முடியவில்லை. காலைப் பொழுது விடியாத இருள் மயமாகவே காட்சியளித்தது. பத்தனை கிராமமும், மக்களும் சூரியனைப் போலவே உள்ளுக்குள் அமிழ்ந்து கிடந்தன.

வேலைக்கு போகும் படபடப்பு மேலிட தூக்கம் கலைத்து - 'வேலைக்குப் போகனும் நேரமாச்சி. சே.. இந்த மழை இருள் விடிஞ்சதை யும் மறச்சிட்டே' - என தனக்குள் முணுமுணுத்த படி கனகா எழுந்தாள். காலைக் கடனை முடித்து பெற்றோர் படத்தின் முன் நின்று வணங்கி விட்டு வராண்டாவை பெருக்கி கோலம் போடத் தொடங் கினாள்.

'என்ன புள்ள எழும்பிட் டியா?. அண்ணன் என்ன படுக்கானா?' இந்த குளி ரிலும் பக்கத்து வீட்டுப் பாட்டியின் குரல் ஓங்கி ஒலித்தது. 'ஓம் பாட்டி. இந்த மழைக்கயும் ஏன் வந்தீங்க'- அக்கறையும், பரிவும் ஒன்று சேரக் கேட்டாள் கனகா. - 'நீ இந்த மழைக்க தனியக் கிடந்து தவிப்பாய்ண்டு ஓலக் கூந்தல தல யில போட்டுட்டு ஓடி வந்தனான் புள்ள' என்றபடி ஈரத்தையும் பொருட்படுத்தாது வேலை யில் இறங்கினார் மீனாட்சி பாட்டி. அவளுடன் சேர்ந்து பழைய நினைவுகளும் மனதிலே சுழன்றன.

சுற்றிலும் தென்னை மரங்கள். வயல்வெளி, ஆங்காங்கே மா, பலா, தோடை , வாழை... போன்ற பழ மரங் கள் என இயற்கை எழில் சூழ்ந்த பெரிய காணியின் நடுவே ஒரு ஓட்டு வீடு. வீட்டின் ஹோல் அழகிய பர்மா தேக்கினால் செய்யப்பட்ட மேசையும், அதனை சுற்றி நான்கு கதிரைகளும், மூலையில் எழுதுவதற்கு ஒரு மேசை யும் கதிரையும் கொண்டு இருக்கும். நான்கைந்து பெட் ரூம்ஸ், அதனை ஒட்டியது போல் வொஷ் ரூம், அள வான ஆனாலும் அழகான கிச்சன். இது தான் கனகாவிற்கும் அவள் அண்ணன் கண்ணனிற்கும் திடீர் மாரடைப்பால் காலமான தந்தை அண்ணாமலை விட்டுச் சென்ற சொத்துப்பத்து. அவர் ஞாபக அலையில் தவித்த கண்மணியும் சில ஆண்டுகளிலேயே கணவன் கல்லறையில் சங்கமம் ஆகிவிட அநாதைகளாகிய சின்னஞ் சிறு பிள்ளைகளுக்கு ஆதாரமாக நின்றது பக்கத்து வீட்டு மீனாட்சி. காலப் போக்கில் மீனாட்சி இவர்களுடன் ஒன்றிப் போனார்.

காலச் சக்கரம் விரைந்து நாட் கள் கழிந்தன. கனகா, ‘பாட்டி என்ன ஆசீர்வாதம் பண்ணுங்க நான் வேலைக்கு போகப் போகி றன்’ என்றாள். மீனாட்சி பாட்டி யின் பாதங்களை தொட்டு வணங் கினாள். கண்கள் பனித்து குளமா கின. மீனாட்சி பாட்டியின். ‘அண்ணாமலை ஐயா இந்த ஊருக்கே தலைவரா இருந்து எப்படி எல்லாம் பாத்து வந்தார் இண்டைக்கி அவர் இல்லாமல் இந்த புள்ளங்க தனியா தவிக்கிறதுகள்’ மனதிற்குள் எண்ணியவர் எதனையும் வெளிக்காட்டாமல் அருகில் நின்ற கண்ணனையும் சேர்த்து- ‘என்ட தங்கங்கள் நீண்ட ஆயுசோட நல்லா இருக்கனும்’ - என்றபடி இருவரையும் அணைத்து கொண்டார்.

கனகாவுக்கும், கண்ணனுக்கும் ஒரு வயசு தான் வித்தியாசம். கனகா படிப்பை முடித்து அந்த கிராமத்தி லேயே ஆசிரியராக இருந்தாள். ஆனால் கண்ணன் கெட்டிக்காரன். என்றாலும் அந்த வயதில் தன் தலை யில் குடும்ப சுமைகளை ஏற்றி வைத்துக் கொண்டான். தங்கையை படிக்க வைத்தான். தன் காணியில் விவசாயம் செய்யத் தொடங்கி னான். அவன் கரங்களுக்குள் சிறைப் பட்ட புத்தகங்கள் விடுதலை பெற, மண்வெட்டி சிறைப்பட்டது. ஒரு பெரிய மனிதர் தோரணையில்- ‘பாட்டி இனி உங்களையும், கன காவையும் தாத்தாவையும் ராணி மாதிரி வச்சிக்குவன்’- ‘என்ன தாத் தாவும் ராணி மாதிரியா’- கனகா சீண்ட எல்லோரும் கலகல என சிரித்து மகிழ்ந்தனர். கண்ணன் அந்த வீட்டில் கிருஷ்ணன் தான். ஓடி ஓடி ஓய்வின்றி உழைத்தான். தந்தையாய், தாயாய், அண்ணனாய், பேரனாய் பல அவதாரங்கள் எடுத்தான். தந்தை பட்ட கடனை தீர்த்தான். பல நாட் கள் நடு ராத்திரியில் தூங்குவான். அத்தனை பொறுப்புள்ள ஆண் மகன் அவன்.

‘தங்கச்சி.. இந்த ஃபோட்டோவப்

பாருங்க பிடிச்சா பேசி முடிப்போம் பாட்டி'- ஒரு மாப்பிள்ளை படத்தை நீட்டினான். வாங்கிப் பார்த்தவள் உள்ளே ஓடினாள். அவள் ஓட்டம் புரியாத கண்ணன் பதற்றத்துடன்- 'பாட்டி... பாட்டி... என்ன கனகா ஓடிட்டு என்னண்டு கேளுங்க பாட்டி.'-

'என்னடா மோன கேக்க. எத்தன ஃபோட்டோ காட்டிருக்காய் மோன. வேணாங்கற புள்ள வெட்கப் பட்டு ஓடுது சரிடா மோன நான் பாக்கன்'- என்றபடி கனகாவைத் தேடி நடக்கலானார்.

கையில இருந்த பணத்தை எல் லாம் சேர்த்து போதாதற்கு அவன் பெயரில் அப்பா போட்டு வைத்த ஃபிக்ஸ்ட் டிபோசிட்டையும் எடுத்து கலியாணத்தை தடபுட லாக நடத்தி ஏகப்பட்ட சீரும் கொடுத்து அனுப்பி னான்.-

'அண்ணா நீங்க அப்பா அம்மா இல்லாத குறையே வைக்காம என்ன வளத்து படிக்க வச்சி இன்டைக்கு தனியா நிற்கிறீங்க...'- அழுத தங் கையை அணைத்த அவனுக்கு நெஞ்சம் துடித்தது. ஆனாலும் ஆண் மகன் அல்லவா அவன்.-

'கவலப்படாத நீ நல்லா இருக்கனும் அதுக்காக நான் எது வேணும்னாலும் செய்வன்'- சரி அண்ணா நான் போயிட்டு வாரன்

பாட்டி நான் வாரன் நீங்க தான் அண்ணாவப் பாத்துக்கணும்.

வழி அனுப்பி விட்டு வராண் டாவில் கிடந்த சாய்மனையில் தலை சாய்ந்து கொண்டான். பாட்டியின் கரங்கள் அவன் தலையை கோதியது. அவனுக்கு ஒருத்தி எப்போது வரு வாளோ? பல மனங்களுக்குள் இந்த வினா எழத்தான் செய்தது. அந்த ஊரில் அத்தனை மனங்களிலும் கண்ணன் ஓவியமாய் தீட்டப்பட்டு விட்டான்.

யார் கண் பட்டதோ!.. யார் செய்த சாபமோ! மீண்டும் ஓர் புயல் சூழ்ந்தது. கனகா வேலைக்குப் போய் விட் டாள்.

கணவர் அன்று விடுமுறை எடுத்து பிள்ளையுடன் வீட்டில் இருந்த நேரம் அது. கிராமத்தில் பாரிய மழை பெய்ததால் திடீரென ஏற் பட்ட மண்சரிவில் அக்கிராமமே பூண் டோடு அழிந்தது. கணவன், தன் பத்து மாதக் குழந்தை, குடும்பம் என மண்ணுக்குள் விதைக்கப்பட இளம் விதவையாய் அண்ணனுடன் அண்டி வாழத் தொடங்கினாள்.

கண்ணன் மீண்டும் அண்ணன் ஆனான் தன் கனவை கலைத்து விட்டு. கனகா மீண்டும் ஊர் பாட சாலைக்கு மாற்றம் பெற்று தன் அண் ணனுடன் தங்கி விட்டாள்.

'பாட்டி... பாட்டி குழம்பு கொதிச்சி வத்துதே எங்க பறக்கிறது கற்பனைக் குதிரை' - கனகாவின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்த மீனாட்சி பாட்டி -'ஆமாடி இப்ப கனவு காண்ற வயசு தானே.'- தன்னை சுதாகரித்துக் கொண்ட பாட்டியை கனகா- 'தாத்தா கனவுல வாரார் போல' -என கிண்டல் செய்து விட்டு

டீ கப்புடன் சென்று 'அண்ணா... அண்ணா... எழுந்தி ருங்க வேலக்கி நேரமாகிட்டு'- என அவனை எழுப்பி விட்டு.'பாட்டி நான் ஸ்கூலுக்கு போக ரெடி ஆகிறன் நீங்க சமையலப் பாருங்கோ'- என வேலையை ஒப் படைத்தாள்.

'கனகா.... கனகா சீக்கிரம் வா. ஸ்கூல்ல போற வழியிலே விட்டுட்டு போறேன்' - ஆ... வாரன் வாரன்.'- என வந்தவளிடம் சாப்பாட்டை நீட் டிய பாட்டி அழகாக வெளிக்கிட்டு வந்த கண்ணனைப் பார்த்து -'என் னடா மோன பொண்ணுகிண்ணு பார்க்க போறியோ.. மாப்பிள்ள மாதிரி இருக்காய் டா மோன'. தன் ஏக்கத்தை கிண்டலாய் வெளிப் படுத்திக் கேட்க. - 'போங்க பாட்டி உங்க ளுக்கு வேற வேல இல்ல என்னப் பாத்துக்க ஒன்டுக்கு ரெண்டு பேரு இருக்கீங்க தானே.' என போலியான கோபத்துடன் வெளியேறினான்.

கனகாவின் குடும்பம் இறந்தற் காக நஷ்ட ஈடு எடுப்பதற்கு விண் ணப்பித்து அதற்காக பல தடவைகள் பிரதேச செயலகம், மாவட்ட காரி யாலயம் என அலைந்து திரிந்து கொண்டிருந்ததன் தொடர் கதை யாக தான் இன்றும் பயணத்தை ஆரம்பித்தான்.

பிரதேச செயலகம் சென்ற போது அவனுக்கு முன்னால் பலர் அங்கு வந்து கூடி இருந்தனர். -'இன் னும் DS வரலியாம் வேற ஊருக்கு போயிருக்காராம் மாறிட்டு. இஞ்ச புதிசா ஒருவர் வரனுமாம் நாம் அலையிறது யாருக்கு தெரியப் போகுது. புதிய DS கேட்டு போராட் டம் வேற நடக்கிறதாம்.'

அங்கு இருந்த வாகை மரத்தின் கீழ் ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கும் பெண்கள் சிலர் பேசிக் கொள்வது கண்ணனின் காதில் விழ - 'கடவுளே இன்டைக்கும் வீண் அலைச்சல் தான்.'- சோர்ந்து போய் வாகை மரத்தின் வேரில் அமர்ந்தான்.

'என்னடி சுகமா இருக்கியா? இப்ப என்ன செய்றாய்'- கும்பலில் நின்ற ஒரு இளம் பெண் இன்னு மொரு இளம் பெண்ணிடம் தொடுத் தாள் கேள்விக் கணைகளை.- 'ஆ... இருக்கன் இருக்கன் சாவு மட்டும் வராத குறைதான்'. - சலித்துக் கொண் டாள். -'உனக்கு என்னடி அப்பா, அம்மா இருக்காங்க தானே'- மீண்டும் அவளை இவள் சீண்டினாள். கண்ணன் இவர்களை மெல்ல நோட்டமிட்டான்.

-'அப்பா அம்மா இருக்காங்க தான் வேளா வேளைக்கு சாப்பாடு தாராங்க பிள்ளைகள பாக்காங்க.. உடுப்பு வாங்கி தாராங்க..' அவ ளால் மேல் பேச முடியவில்லை. தொண்டை கரகரத்தது. அவள் நிமிர்ந்தாள் கண்கள் கலங்கி இருப்பதையும், அதனை யாருக்கும் தெரியாமல் துடைப்பதையும் கண்ணன் பார்த் தான். அவளுக்குள் ஏதோ வலி இருப்பதை உணர்ந்து அவர்களை கவனிக்க தொடங்கினான். தான் வந்த வேலையையும் மறந்து போன வனாய்.

'ஏன் கண்கலங்கிறாய், பெத்த வங்க உன்ன நல்லாத்தானே பாக் காங்க'- என மற்றவள் இவளை ஆசுவாசப்படுத்தினாள்.' 'என்னத் தந்து என்ன செய்ய நான் தனியா இப்படியே இருந்தா அவரு என்ன இனி வரவா போறார். இந்த சமூக ஆட்கள் பேசிற பேச்சு. இத அப்பாக் கிட்ட என்னண்டு சொல்ற அவருக்கு ஒன்னும் புரியுதில்ல....' -இனி பேசும் சக்தி அவளுக்கு இருக்கவில்லை.நா தழுதழுத்தது. கண்களில் நீர் தாரை தாரையாய் சொரிந்தது.எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

கண்ணனுக்கு யாரோ சம்மட் டியால் ஓங்கி அடித்தது போல் இருந்தது. இவள் முகம் ஒரு புறம் நிற்க தங்கையின் சோகம் மறைக்கப்பட்ட முகம் மறு புறம் தலைதூக்கியது.- 'நானும் இப்படித்தான் அவளின் ஏக்கத்தை புரியாமல் சமூகத்தில் தவிக் கும் விதவைகள் பற்றியும் நினை யாது ஒரு பயனற்றவனாக வாழ்ந்து விட் டேனே'- அவன் மனம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வீட்டை நோக்கி பைக்கை முடுக்கினான்.

'பாட்டி... பாட்டி....'

கண்ணன் குரல் என்றும் இல் லாதவாறு ஓங்கி ஒலித்ததால் மீனாட்சி பாட்டி பதற்றத்துடன் ஒடி வந்து - 'என்ன கண்ணா என்னாச்சி....' 'ஒனடுமில்ல நீங்க அடிக்கடி என்ன கலியாணம் பண் ணிக்க கலியாணம் பண்ணுன்டு திட்டுவீங்க அத நிறை வேற்றப் போறன்... .அத விட கன காவின் எதிர்காலம் பத்தி நாம் யோசிக்காம இருந்திட்டம். அவளுக் குள் எத்தன ஏக்கம், எதிர்பார்ப்பு இருக்கும் நான் முட்டாள்தனமா சும்மா இருந்திட்டன். -அதுக்கும் உடனே ஒரு வழி பண்ண வேணும்' என மூச்சு விடாமல் பேசி முடிக்க பாட்டி மகிழ்ச்சி பொங்க..

-'என்ட தங்கமே இப்பயாவது உன்னப் பத்தி நினச்சியே! தங்கச்சி ஊருன்னு மத்தவர்களுக்காக வாழ்ந் தாய் மோன... அதெல்லாம் செரி நான் நல்ல பொண்ணு பாக்க போக னும் என்ன விடு'- என எழுந்த பாட்டி கையைப் பிடித்து- 'அந்த சிரமமும் இல்ல பாட்டிம்மா' 'என்ன மோன உன்ட மனசிலே ஒருத்திய வச்சிட்டு இத்தன நாளாக இருந்தாயா'- ஆனந்த கண்ணீர் பொங்க கட்டி அணைத்து முத்தமிட்டாள். இல்ல பாட்டி இன்டக்கி கன காட கண வர் இறந்தப்ப அந்த விபத்தில கணவன இழந்து தவிக்கும் இளம் விதவைப் பெண் ஒன்ட கண்டன் அவரத்தான்'....

பேச்சு நின்றது. பாட்டியின் கரங்களுக்குள் அவன் கரங்கள் இறு கியது. 'நீ தான்டா மொன ஆம்பிளப் பிள்ள சின்ன வயசில இருந்து மத்தவகளுக்காக வாழ்றாய் உன்ட இந்த முடிவால நீ எல்லார்ர மனசிலயும் உயர்ந்து நிற் பாய்.' பாட்டியின் வார்த்தைகள் அவனை மெல்ல மெல்ல உயர்த்திக் கொண்டே இருந்தன.. கண்ணன் ஒரு ஆளுமையுள்ள மன்னன் என்று எங்கோ ஒரு ஒலி கேட்கத்தான் செய்தது.



# ஆண் எனும் அப்பாவி

வெளிப்புறங்களில்
முட்களை சுமந்து
உள் வெளியில்
ரோஜாத்தோட்டம்
வளர்ப்பவன்

சிறு வயதில் அக்கா தங்கைக்காக
பொம்மைகளை
தியாகம் செய்பவன்

இளமையைத் தொலைத்து
வீட்டின் சுமைகளை
முதுகில் சுமந்து
வாழ்வையும் இழப்பவன்

முரடன் சிடுமூஞ்சி எனப்
பெயர் கொண்ட அப்பாவி!

ஆணாதிக்க சமூகம்
எனும் பொதுப்பெயரில்
நசுக்கப்படுபவன்

தாரத்தை இழந்த
பிற் பொழுதில்
வாயில்லாப்பூச்சியாக
காலம் கழிப்பவன்!

நேசிக்க மனமில்லா
விடினும்,
சபிக்காதிருங்கள்!
அவனும் சிறிதேனும்
தனக்காக வாழ்ந்து விட்டு
போகட்டும்!

**சோதிகா.ஏ (ஆகிஷா)**
கொக்குவில்.

# ஆண்கள் தின வாழ்த்துகள்



கவிமாமணி . முனைவர் .
**–சரஸ்வதி பாஸ்கரன் ,**
திருச்சி , தமிழ்நாடு , இந்தியா



காண்கின்ற இடமெல்லாம்
கருணையான ஆண்களுமே
ஆண்பாலும் அகத்தினிலே
அன்புடைய மாமனிதர்
ஆண்வழியோ தனிவழியே
ஆண்டவனின்
பரிசுத்தம்

ஊண்சோறும் மறந்தவராய்
உலகினிலே
தெய்வீகம்
சீண்டல்கள் உண்டிங்கே
சீரிளமைக் கொண்டவராம்
கண்டங்கள் கடந்திடவும்

காண்போர்கள் மெச்சிடவும்
பெண்களிடம்
முறைதவறிப் பயணிக்கும்
முற்றிலுமே ஈங்கில்லை

நுண்ணறிவு மிக்கவராய்
நூறாண்டு வாழ்வார்கள்
அண்டத்தில் பாதுகாப்போ
அன்பாலே நின்றேகும்

மண்ணுலகில் ஆணினமும்
மாசற்றப் பண்பாளர்
பெண்ணினத்தைப் பேணுகின்ற
பெருஞ்சுடராய்
மாறிடுவர்

கண்ணிமைப்போல் காத்திடுவார்
காசினியில்
விண்ணுலகும் போற்றுகின்ற
விந்தையான ஆணினமே
தீண்டாமை நீக்குகின்ற
திண்ணமான ஆண்களுமே
நீண்மொழியைப் பேசுகின்ற
நீள்புகழின் ஆணினமே
காண்டங்கள் பலவற்றில்
கருத்துடனே ஆணினமே

தூண்டிலிலே வலைவீச
துணையாவார் ஆணினமே ,
வேண்டியதைத் தருகின்ற
வெள்ளையுள்ளம் ஆணினமே
யாண்டுமினி பொற்காலம்
யாவருமே மகிழ்ந்திடவே
வேண்டுகின்ற
மக்களுக்கு
வேண்டுவன
தந்திடுவான்

மாண்டார்கள் மீண்டுவர
மறுப்பின்றிக் காக்கின்றார்
வேண்டுதலும்
ஆணினத்தின்
வெற்றியினைப் பறைசாற்ற
தீண்டுகின்ற போழ்தெல்லாம்
திக்கெட்டும்
சுபதினமே
ஆண்பெண்ணும் வேறின்றி
அன்புடனே வாழ்ந்திடுவார் .

# நம்பிக்கை ஒளி எம்மான்

தன் பிள்ளை வாடாதென்று
நினைப்பவரே
எம் வாழ்வில் ஒளிவீசிட
விளக்கேற்றியவரே
குடும்பத்தின் தலைமை
வகிக்கும் தந்தையே
குடும்பம் தலைநிமிர்ந்திட
அயராது உழைப்பவரே


வியர்வை சிந்தியே வாழும் உயிரே
நெஞ்சுக்குள் பலவலிகளை
சுமக்கும் சுமைதாங்கியே
துயரங்களை நெஞ்சிலே
அடைத்து வைப்பவரே

வெற்றியை நாமடைய
தோல்விகளை சந்திப்பவரே
ஏழ்மையிலும் உனக்கேன்
பிள்ளையென யார்கேட்டிடினும்
அதை பொருட்படுத்தாமல்
வாழும் உயிரே
தோளிலே சுமக்கும் அன்பு ஒளியே
குடும்பத்தில் ஒளிபெருக
மெழுகாக உருகுவீரே

பெண்கள் பலர் சரித்திரம் படைத்திட
உணர்வுகளை மதித்து
உந்துதல் கொடுக்கும்
அற்புத ஒளி விளக்கே எம்மான்/
வாழ்க வளமுடன் நலமுடன் என்றுமே/

**எச்.டீ.எச் பஹ்தா**
கொழும்பு

## நூல் விமர்சனம்




# சிறகில் சிக்கிய வானம்

வாசிப்புப் பிரியர்களுக்கான சிறந்த வாசிப்பிற்கான அருமையான நூல்களை தேடித், தேடி வாசித்து, சுவைத்து பகிர்ந்து கொள்வதில் எமக்கு எப்போதுமே ஒரு அலாதி பிரியம் தான்.

அருமையான நாவல்கள், சிறு கதைத் தொகுதிகள், கவி நூல்கள் என வாசித்துப் பகிர்ந்து கொண்டிருந்த எனக்கு அண்மையில் அருமை யான ஒரு பயணக் கட்டுரை நூல் வாசிக்கக் கிடைத்தது. பயணங்கள் எப்போதுமே எல்லோருக்கும் ஓர் இனிமையான சுவாரஸ்யம் நிறைந்த, மனதுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தாலும், அதனை எழுத்துருவில் விவரித்து கட்டுரை நூலாக கொண்டு வருவது என்பது எல்லோராலும் இலகுவில் செய்து விட முடியாது என்டது தான் உண்மை.

பயண அனுபவங்களை சுவை பட இலக்கிய நயத்துடன் விவரிக்கும் போது தான், வாசகர் மத்தியில் அது வியப்பான ஒரு சுகா னுபவமாக, ஆச்சரியத்துக்குரிய விடயமாக மன தில் நின்று விடு கின்றது எனலாம்.

அருமையான பயணத் தேடலின் அழகிய ஒப்புவிப்பாக நமக்கு பய ணக் கட்டுரை வாசிப்புகள் அமைந்து விடுகின்றன.

அந்த வகையில் வியப்பான ஆச்ச ரியமான, ஒரு அழகிய ஆன்மீகப் பயண கட்டுரை நூல் ஒன்றை சிறந்த இலக்கியவாதியும், சிறந்த மொழிபெயர்ப்பாளருமான கலாநிதி மரீனா இல்யாஸ் சாபீ அவர்கள் எழுதிய 'சிறகில் சிக்கிய வானம்' எனும் நூல் வாசித்தேன்.

உண்மையிலேயே அவர் அந்த நூலில் குறிப்பிட்டு இருப் பது போன்று 'ஆன்மாவுக்கு தீனி போடும்' அருமை யான ஒரு நூலாகவே இதனை நாம் காணலாம்.

அவரது எழுத்துக்கள் அத்தனை யும் அவரது மாறுபட்ட எண்ண ஓட்டங்களை இந்நூல் முழுக்க அழகாய் பிரதிபலித்து நிற்கின்றன என்றால் மிகையாகாது.

அவர் மேற்கொண்ட இந்த 40 நாள் சுற்றுப்பயணமும், ஆறு நாடுகளில் அவர் கண்டு அனுபவித்த அனுபவமும், அல் குர்ஆன், ஹதீஸ், வரலாற்றுச் சம்பவங்கள் கூறும் அத்தாட் சிகளை பார்வையிட்டு அவர் சுவைபட விவரிக்கும் போது வாசகர்களாகிய நமக்கு அந்த இடங்களை போய் நேரடியாக கண்டு மெய்சிலிர்த்துப் போகும் சுகானுபவத்தை அவரது எழுத் துக் கள் நமக்குத் தந்திருக்கின்றன. சுப ஹானல்லாஹ்!

அழகிய அட்டைப் படத்துடன், 140 பக்கங்களைக் கொண்ட இந் நூல் 23 சுவாரஸ்யமான சிறிய சிறிய கட்டுரைத் தொகுதிகளை கொண் டிருப்பது வாசகர்களுக்கு இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியவாறு இருக் கிறது.

ஜாமியா நளிமிய்யா முதல்வர், அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் அவர்களின் மிக அருமையான ஆழமான அணிந்துரை இந் நூலின் மகுடமாகவே அமைந்திருக்கின்றது.

முஹம்மத் முஹ்சீன் அவுஸ்தி ரேலியா தமிழ் வானொலி அவர் களின் ஆசி செய்தியும், தமிழ் நெஞ்சம் அமின் சேரின் மீண்டும், மீண்டும் படிக்கத் தூண்டும் அழகிய வாழ்த் துப்பாவும் நூலை மேலும் மெரு கேற்றி இருக்கின்றன எனலாம்.

இறைவனின் அத்தாட்சிகளை பூமி எங்கும் சுற்றிப் பார்த்து 'சுபஹா னல்லாஹ்' என்ற அவனின் ஆற்றலை வியந்து போற்றுபவர் களாக எம்மை இந்த பயணக் கட்டுரை மூலம் உணர வைத் திருக்கிறார் கட்டுரையாளர் மரீனா இல்யாஸ் ஷாபீ அவர்கள்.

'அவர் நடந்த பாதையில் என் கால்கள் தடம் பதிக்க வேண்டும்'. 'அவர்கள் இளைப்பாறிய மரத் தின் கீழ் நான் இளைப்பாற வேண் டும்' என எம்பெருமானார் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சிறு வனாக இருந்த வரலாற்றுச் சம்பவத்தில் கட்டுரையை ஆரம்பித்து இருக்கிறார் நூலாசிரியர்.

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் இளைப்பாறிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட வருடங்கள் முதிர்ச்சியான மரத்தை எங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார் .

அடுத்து சூரா கஹ்ஃப் குறிப்பிடும் 300 வருடங்கள் தூங்கி எழும்பிய (இளைஞர்கள்) குகை வாசிகள் பற்றி குறிப்பிட்டு, அக்குகையையும், அவர்களின் எலும்புகளையும் இந்நூலில் புகைப் படம் மூலம் எமக்கு காட்டி இருக்கிறார்கள்.

அடுத்து சாக்கடல் பற்றியும் லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகம் அழிக்கப்பட்டது பற்றியும், மிக அழகாக விவரித்து இருக்கி றார்கள்.

அடுத்து ஜோர்தான் நாட்டு வரலாற்று முக்கியம் வாய்ந்த நெபோ மலையும், ஸுஐப்(அலை) அவர்களின் அடக்கஸ்தலம், மஸ்ஜி துல் அக்ஸா வளாகம், அழுகை சுவர், மிதக்கும் பாறை, எல்லாவற்றையும் புகைப்படங்களாக தந்து மேலும் ஜோடான் பலஸ்தீன் எகிப்து ஆகிய நாடுகளின் முக்கிய இடங்களை புகைப்படங்களுடன் விவரித்து, ஈற்றில் மக்கா நகர் புனித ஹரம் ஷரீப், மதினா மஸ்ஜிதுன் நபவி, அறபா மைதானம் என அத்தனை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் மிகவும் உணர்வு பூர்வமாக விவரித்து அந்தப் படங்களையும் எம்மோடு பகிர்ந்து இருக்கிறார்கள்.

ஹஜ்ஜுக்காலத்தில் என்னால் நேரடியாக கண்டு அனுபவித்த இடங்களை அவர்கள் மிக அழகாக விவரித்து விளக்கங்களுடன் தந்திருப்பது மீண்டும் ஒருமுறை அந்த இடங்களை தரிசித்த ஒரு அற்புத மான திருப்தி உணர்வுபூர்வமாக என்னுள்ளே பிரவாகித்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இறைவனின் அற்புத அத்தாட்சிகளைக் கொண்டு கலைக்கண்களால் நோக்கிய ஒரு ஆன்மீகப் பயணத்தை நாமும் அனுபவித்தது போன்று அழகிய உணர்வை ஏற்படுத்தும் இந்த நூல் உண்மையாகவே 'ஆன்மாவுக்கு தீனி போடும்' அற்புத நூலாகவே நாம் காணலாம்.

எனவே இந்த அற்புத நூலைத் தேடி வாசிப்பதுடன் எமது இளைய சந்ததிகளின் சிறந்த வாசிப்பிற்காக எமது புத்தக அலுமாரிகளை அலங்கரிக்க கூடிய சிறந்த சேமிப்பாக வைத்துக் கொள்வோம்.

மேலும் எமது நூலாசிரியர் நோய் நொடியற்று நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து, இன்னும் கலை யுலகில் சிறந்த படைப்புகளை எங்க ளுக்கு வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து, இந்த நன்னூலை சிறந்த வாசிப்பிற்காக தந்த அவர்களை மனமுவந்து வாழ்த்துவோம்.

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**

கிண்ணியா

# படித்ததில் பிடித்தது



'அமெரிக்காவில் மிகப்பெரிய பணக்காரார் அவர். தன் தாயின் பிறந்தநாளுக்கு பரிசளிக்க. ஒரு பெரிய கடையின் முன், தன் காரை நிறுத்து கிறார். பிரபலமான பூக்கடை அது. எவ்வளவு விலை சார் இது'

' 250 டாலர்'

'இதைவிட அருமையான பூ காண்பிக்க முடியுமா?'

'வந்தவர் மிகப்பெரிய பணக் காரார் என கடைக்காரருக்கு தெரி கிறது.' 'இது 'ஆர்கிட்' வகைப் பூ... மிக அருமையா இருக்கும். ஒரு வாரம் வரை வாடாது'

'500 டாலர்'

சரி, இதையே பேக் செய்யுங்கள்! உங்களிடம், 'கூரியர்' சர்வீஸ் இருக்கா?'

கொரியர் சர்வீஸ்' சும், செய்கி றோம். அதற்கு ஒரு 100 டாலராகும்.

'வேண்டாம்... இந்த பூங்கொத்து இன்று என் தாயிடம் போய் சேர வேண்டும். இன்று என் தாயின் பிறந்தநாள். கொரியர் சர்வீஸ்' பல காரணங்களுக்காக தாமதமாகலாம். எனக்கு இன்றே போகணும்.

ஒன்று செய்யுங்கள்! ஒரு காரும் டிரைவரும், ஏற்பாடு செய்து இந்த பூங்கொத்தை, இன்றே என் தாயி டம், இந்த அட்ரஸில் சேர்த் திடுங்க!'

'ஓகே சார், இப்பவே ஏற்பாடு செய்கிறேன் இன்றே போய் சேர்ந்து விடும்.. அதற்கும் சேர்த்து 500 டாலர்'

'நோ ப்ராப்ளம்' பணத்தையும், அம்மாவின், வீட்டு அட்ரஸ் கொடுத்து விட்டு நகர்ந்தார் அந்த பணக் காரார். மனம் முழுக்க மகிழ்ச்சி, தன் பிஸி நேரத்திலும், தன் அம்மாவின் பிறந்த நாளை மறக்காமல், பூங் கொத்து அனுப்பி விடுகிறோம் என சந்தோஷத்துடன் காரில் ஏறப் போக, ஒரு சிறுமி ஐந்து ஆறு வயது இருக்கும் அழுதபடி இருக்கிறாள். 'குழந்தை ஏன் அழறே?'

'அங்கிள்! எனக்கு ஒரு டாலர் பணம் தர முடியுமா ?'

'ஓகே, ஒரு டாலர் தானே தரேன். எதற்குப் பணம்? ஏன் அழு கிறாய்? ஏதாவது தொலைத்து விட்டாயா?' 'நோ அங்கிள்! எங்க அம்மாவின் பிறந்தநாள் அங்கிள் இன்று'

நான் வருடா, வருடம் அம்மா வின் பர்த்டே க்கு, அம்மாவுக்கு பிடித்த ஒரு ரோஜா பூ வாங்கித் தருவேன். இன்று அம்மாவின் பிறந்த நாள். என்னிடம் பணம் இல்லை. நீங்க ஒரு டாலர் கொடுத் தால் ஒரு ரோஜா பூ வாங்கி அம்மா விற்கு கொடுப்பேன்'. அம்மா எனக் காக வெயிட் டிங்'.... ப்ளீஸ் அங்கிள் ஒரு டாலர் தரமுடியுமா?'

பாவம் ஏழை பெண் அவள். 'ஒரு டாலர் என்னமா! 10 டாலர் தரேன் எடுத்துக்கோ'

'வேண்டாம் அங்கிள்!, ஒரே ஒரு டாலர் போதும்' என ஒரு டாலரை மட்டும் எடுத்துக்கொண்டு 'சிட்'டாக பறந்தாள் அச் சிறுமி. ஏதோ சாக்லேட் வாங்க தான் அப் படி ஒரு டாலர் கேட்கிறாளோ? என நினைத்து அந்த பணக்காரர் மெதுவாக காரை அவள் செல்லும் இடம் நோக்கிச் செலுத்த சொன் னார் டிரைவரிடம்.

ஒரு சின்ன பூக்கடையில் ஒரு டாலர் கொடுத்து ஒரு சிகப்பு ரோஜா பூ வாங்க கடைக்காரர் அதை அழ காக பேக் செய்து கொடுக்கிறார். மிகுந்த சந்தோஷத்துடன், அச்சிறுமி பூவை எடுத்தபடி ஓட, அச் சிறுமி எங்கு போகிறாள்; எந்த வீடு;தாய் யார்? என அறிய டிரைவரிடம் காரை சிறுமியின் பின்னால் போக சொல்லுகிறார்.

சிறுமி, பல தெருக்களைக் கடந்து ஓடுகிறாள். அவளுக்கு தெரியாமல் அவளைப் பின் தொடர்கிறது கார். பல வளைவுகளை, தெருக்களைக் கடந்து, ஓடும் அவள். போய் நிற்கும் இடம் ஒரு சமாதி.ஒரு கல்லறையின் அருகில் போய் நின்று, ரோஜா பூவை வைத்து, 'அம்மா, ஹாப்பி பர்த்டே' உனக்கு மிகப் பிடித்த ரோஜாப்பூ நான் வாங்கிட்டு வந்துட்டேன் மா' எனக் கூறி அம்மாவின் கல்லறையில் முத்தமிட பார்த்துக்கொண்டிருந்த பணக்காரரின் கண்களில் கரகரவென நீர் சுரந்தது.

'சார்!'மீட்டிங்கிற்கு, நேரமாச்சு' டிரைவர் அவசரப்படுத்த, கண்ணை துடைத்தபடி அவசர அவசரமாக காரில் ஏறி, கடைக்கு போய், தான் வாங்கி வைத்த பூங்கொத்தை, எடுத் துக்கொண்டு வண்டியை, வீட்டிற்கு போக சொன்னார்.

'பெரிய கார், தன் வீட்டின் முன் நிற்பதை பார்த்த 92 வயதுடைய தாய் கண்களைச் சுருக்கி, 'யாரது' என பார்க்க 'அம்மா' என அழைத்தபடி பூங்கொத்தை கொடுத்து 'பிறந்தநாள் வாழ்த்துகள் அம்மா' எனக்காலில் விழுந்த, மகனை ஆரத் தழுவிய தாய்.'உனக்கு இருக்கும் எக்கச்சக்க வேலையில், ஏம்பா நீ வந்தே?'

'அம்மா! அன்பை எப்படி வெளிப் படுத்துவது என ஒரு சிறுமியிடம் நான் கற்றுக் கொண்டேன். உயிரோடு இல் லாத தன் தாய்க்கு அச் சிறுமி எப்படி பூங்கொத்தை கொடுத்து அன்பை வெளிப்படுத்தினாள். நெகிழ்ந்து விட்டேன். ஆனால் நான்..... அச்

*சிறுமியின் மூலமாக அன்பை, எப்படி வெளிப்படுத்துவது என அறிந்தேன். உயிரோடு இருக்கும், என் தாய்க்கு நேரில் வந்து பார்த்து, வாழ்த்துப் பெறுவதை விட பெரும் பாக்கியம் எனக்கு ஏது' மகதுதுதுதுனை கட்டி அணைத்து முத்தமிட்டாள் அத் தாய்.*

*தாய், தந்தை இருப்பவர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் மரியா தையை, அன்பை, வாரி வழங்கத் தவறாதீர்கள்! அன்பை வெளிப் படுத்த மறக்காதீர்கள்! உங்கள் பண்பை நினைத்து மகிழ்ந்து, ஒரு சொட்டுக் கண்ணீர் உங்கள் தாயின் கண்களில் இருந்து வந்தால் உங்கள் வாழ்க்கை சிறக்கும்.*

*எல்லா தாய்க்கும் தன் பிள்ளை களின் மகிழ்ச்சி,உயர்வு என்றும் சந்தோஷமே! மகிழ்ச்சியில், எல்லா தாயின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் தான் சுரக்கும்.*

**கல்பனா**



# இடைப்பட்ட காலங்கள்

உறவென்று நம்பிக் கொண்டிருப்பவர்களால்
ஏற்கனவே நாம்
கைவிடப்பட்டிருக்கிறோம் என்பதைக்
காலந்தாழ்த்தியே நம்மால்
உணர முடிகின்ற கணங்கள்தான்
ஆகவும் கொடுமையானவை.

அந்த இடைப்பட்ட காலங்களில்
நாம் என்னவாக இருந்திருக்கிறோம் என்பதை
எல்லாமும் இழந்த சூனியப் பொழுதொன்றில்
கண்களில் ஓரமாய் வழியும் உப்புச்சாரலோடு
உணர்ந்து கொள்வதிலிருந்து தொடங்குகிறது...
நமக்கே நமக்கான சுயபச்சாதாபங்கள்.

**எஸ். ஃபாயிஸா அலி.**

# இன்னும் இனியும்....



என் காதலைக் கவிதை கொண்டு
மூடி வைத்திருக்கிறேன்
என் நேசத்தை இரு விழிக்குள்
திருடி வைத்திருக்கிறேன்

என் பேரன்பை ஓடும் இரத்தத்தில்
ஊற்றிக் கலந்து விட்டிருக்கிறேன்
என் ஈர்ப்பை ஆன்மாவைக் கிழித்துத்
தைத்து வைத்திருக்கிறேன்

என் காதலை எனக்குள்
கொந்தளிக்கும் கடலாக்கியிருக்கிறேன்
பொங்கி வெடிக்கும்
நேச எரிமலையோடு
நடமாடிக் கொண்டிருக்கிறேன்

ஆன்மப்பூரிப்பின் சூரியனை
உள்ளே வைத்து
நடித்துக் கொண்டிருக்கிறேன்
யாராலினி கண்டுபிடிக்க முடியும்
யாராலினி ஐயம் கொள்ள முடியும்

இப்போது சொல்
நீ வேறு நான் வேறா
இன்னுமா என்று கேட்பதை நிறுத்து
இன்னும் இனியும் என்பது என் கருத்து

ஆதியில் நாம் பற்றிய நேசம் இப்போது
முதிர்ந்து கனிந்து நம்மைப்
பற்றிப்படர்ந்து
நீட்சியடைந்திருக்கிறது

என் முழு அன்பையும்
வாங்கிக்கொள்ளும்
ஆற்றலைக்கற்றுக்கொள்
காந்தமென ஆகு

என் நேசம் பூக்களின் ஸ்பரிசம்
என்று நீ கூறலாம்
பூமி துளைக்கும் வேரின் விரல்கள்
என்று எனக்கு மட்டுமே தெரியும்!

Dr. **ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்
இலங்கை

# உண்மையான திருப்தி

எல்லோருக்கும் எம்மை பிடித்துப் போக வேண்டும்..
எல்லோரும் எமக்கு மரியாதை செய்து விட வேண்டும்..
எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும்..
எல்லோரிடமும் எம்மை நிரூபிக்க வேண்டும்..
எல்லோருக்கும் அறியப்படுத்த வேண்டும்..
எல்லோரிடமும் நல்ல மனிதன் என்ற பட்டத்தை பெற வேண்டும்..
எல்லோருடைய பேச்சையும் கேட்க வேண்டும்..
எல்லோருக்கும் பதில் அளித்திட வேண்டும்..
எல்லோரிடமும் எம்மை நியாயப்படுத்த வேண்டும்..
எல்லோருக்கும் தெரியப்படுத்திதான் எல்லாம் செய்ய வேண்டும்..
என்று எதுவும் இவ்வுலகில் இல்லை..
எதுவும் எமது மனசாட்சிக்கு திருப்திப்படுத்துவது போல் செய்தாலே போதும்..
பிறர் வழங்கும் திருப்தி எம் வாழ்வில் நமக்கு தேவையில்லை.
நமக்கு நாம் திருப்தியுள்ள மனிதனாக வாழ்ந்தாலே நம் வாழ்வு அழகானது.



பஸ்ரியாபாயிஸ், ஹெம்மாதகம

# தேநீரின் கண்ணீர்

அந்தி சாய்ந்த மாலை வேளையில்
அசைந்தாடும் தென்றலின் தீண்டலில்
மனம் மணக்க சினம் அடங்க
இதமான இளஞ் சூட்டுத் தேநீரில்
கலந்திருக்கும் கண்ணீரின் நீயறியா கதையிதுவே!

குளவிக் கூட்டத்தில் சிக்கிய குழவியாய்
பணமோகப் பிசாசுகளின் பிடியில் பிணமாக
மழை பாராது மலை ஏறி
அட்டைப் பூச்சிகள் பாதங்களை முத்தமிட
உலையெரிய உழைக்கும் சமுதாயத்தின் கண்ணீர்

வெள்ளையன் வருகையில் கொத்தடிமையாய் வந்து
மலையே தஞ்சமென மலைவாழ் பொறியில்
துரைகளின் மனசாட்சியற்ற அதட்டலுக்கு அடிபணிந்து
காலணியின்றி முட்களுக்கும் கற்களுக்கும் இரையாகி
இறைபாதம் சேரும்வரை உழைக்கும் அவலம்

பட்டை மரத் தூண்கள் அடுக்கி
தகரக் கூரைகள் வேய்ந்த கொட்டில்கள்
பாதுகாப்பென்ற சொல்லுக்கு உவமை இல்லை
நீரில் சிக்கிய விட்டில் பூச்சிப்போல்
தீயில் சிக்கிக் கருகும் பரிதாபம்

சந்தர்ப்பவாத அரசியலில் போலிச் சத்தியங்கள்
மலை கடந்து கல்வி நோக்கி
கண்ணீர் துடைக்கும் விடிவைத் தேடி
வறுமை போக்கிட வழியை நோக்கி
படையெடுக்குமா பட்டாம்பூச்சிகள் துணிவு கொண்டு

இங்கு செப்பனிடப்பட்ட பாதையில்லை
கண்களுக்கு அணை போடத் துணையில்லை
தினம் சிறு கூலிக்காகக் குறுகியும்
நிறமற்ற கனவுகளின் கலா பீடமாய்
அடுக்கப்பட்ட குடிசைகளின் லயத்து வாழ்க்கை

கவிக்குயில்
**ஷியாஸ்னா பைஸல்**

தன்வீர் சென்னையிலிருந்து அரபு தேசம் நோக்கி பயணப்பட்டான். சொந்த மாமா கடைக்கு சலவை தொழில் நிர்வாகம் செய்ய. காலை 9 மணிக்கும் திறக்கப்படும் கடை இரவு 12 மணிவரை இயங்கும். அரபு, மலையாளம், இந்தி, இங்கிலிஷ் ஆகிய மொழி பேசக்கூடியவர்கள் அதிகம் கடைக்கு வருவதுண்டு. இவன் தமிழ் பேசுவதால் மேற்கூறிய மொழியை அரைவேக்காட்டுத்தனமாய் பேச ஆறு மாதத்திற்குள் பழகிக் கொண்டான். சனிக்கிழமையானால் மூட்டை மூட்டையாக துணி வந்துக்குவியும். வாரத்திற்கு அந்த நாள் மட்டுமே களைக்கட்டும். இன்னும் இரண்டு ஆட்கள் வேலை செய்து வந்தனர். மூவர் இருந்தாலும் இவன் மட்டுமே



*கடையை நிர்வாகம் செய்துக் கொண்டிருந்தான். வாடிக்கையாளர்கள் நிறைய நபர்கள் கடன் வைப்பதும் அதனை வசூல் செய்ய அனுதினமும் மாடி மாடியாய் ஏறுவதும் அதுவே அவனுக்கு சலிப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். அவனது கடைக்கு எதிர்புறம் 25 மாடி பில்டிங் வலதுப்புறம் 5 அடுக்கு மாடி 10 அடுக்கு மாடியென நிறைய வீடுகள் இருந்தும் அங்கு வசிக்கும் பெரும்பாலானவர்கள் விசிட் விசாவில் தங்கி இருப்பர். அருகில் நிறைய சலவைக்கடை இருப்பதால் வேலை முடிந்து உடனே பணம் வேண்டுமென்று பிடிவாதமாய் அவனிருந்தால் மறுநாள் அதே வாடிக்கையாளர் என் சட்டை தீஞ்சிப்போய்விட்டது. பேண்ட் நீ கொடுக்கும் போது ஒன்று குறைந்துவிட்டது 100 திர்ஹம் கொடு 200 திர்ஹம் கொடு என்னத்த சொல்ல 700 திர்ஹம் வரை கொடு என்று அவனிடம் சண்டையிட்ட வாடிக்கையாளர்கள் இருந்தார்கள் . இதனால் அவன் ஒரு நாள் முடிவு செய்தான். இங்கு இருக்கின்ற எல்லா வீட்டிற்கும் செல்ல வேண்டும், சென்று தமிழ்மொழி பேசக்கூடிய மனிதர்களை மட்டும் மாதாந்திர உறுப்பினராக ஆக்கி விட வேண்டுமென. பல நாட்கள் பல மாதங்கள் போராடிக்கொண்டே இருந்தான். ஆயினும் 1,2 மனிதர்கள் தான் அவன் கண்களுக்கு அகப்பட்டார்கள். கடைக்கு மூன்று மாதத்திற்கு ஒரு வாடகையை காசோலையாக கொடுக்க வேண்டும். 11 மாதத்திற்கு ஒரு முறை லைசென்ஸ் ரினிவல் செய்ய வேண்டும். இப்படி பேனா, நோட்டு, மார்க்கர், துணி வைத்து மடித்துக்கொடுக்கின்ற கவர் வரை சுமார் 90% சென்றுவிடும் அவனது கடும் உழைப்பு. நடந்து நடந்தே அவனது காலில் ஆணியும் வந்தது. ஒரு நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை கழிவறையில் வழுக்கி விழுந்து அவனது இருகால்களும் பலத்த சேதம் ஆயின. அன்றைய தினம் அவனது முதலாளி அவனை காரில் அழைத்துச்சென்று உயர்தர ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே எடுத்து கட்டுப்போட்டு அழைத்து வந்தார். நடக்க முடியாமலே இருந்தாலும் கடைக்கு வந்துவிட வேண்டும். ஒரு மாதம் உந்தி உந்தியே சிரமத்தோடே வருவான். கடைக்கு வரவில்லையென்றால் சம்பளம் கிடைக்காதே. குடும்பத்தினர்களுக்காகவே மெழுகானான். நாட்கள் உருண்டோடின. தற்போது எல்லா வீட்டிலிருக்கும் மனிதர்களை படித்துவிட்டான். யார் காசுக்கொடுப்பார்கள் யார் ஏமாற்றக்கூடியவர்களென. கடையில் வேலைப்பார்க்கும் சக இந்தி ஊழியனிடம் பேசிப்பேசியே இந்தியை கரைத்துக் குடித்தான். அதனால் அவனுக்கு கொஞ்சம் மனதில் தன்னம்பிக்கை உறுதிவந்துவிட்டது*

*இரண்டு ஆண்டுகள் மட்டுமல்ல எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் ஓட்டிவிடலாமென. அப்போது பண மதிப்பிழப்பு அந்த தேசத்தில் நிகழத் துவங்கியது. தொடக்கம் தான் அது. அவனது கடைக்கு ஒரு நாளைக்கு 100 திர்ஹம் வருவதே முக்கி முக்கி முனங்கலோடு வரும். இதில் இதுவேறு*

ஆரம்பமாகி கொண்டிருந்ததால் நிரந்த வாடிக்கையாளரும் மூட்டை முடிச்சுக் கட்டிக்கொண்டு தங்களின் பூர்வீக தேசத்திற்கே தஞ்சம் புக ஆரம்பித்துவிட்டார்கள். இவனது முதலாளி இவனைப்பார்க்க இவன் அவரைப்பார்க்க வெறுங்கையோடு கூட பல நாட்கள் காசு வரவில்லாமல் விழிப்பிதுங்கிய வண்ணமிருப்பான். இந்திக்காரனுக்கு குஷியாகி விட்டது. துணிவரவு குறைந்துக் கொண்டே இருப்பதினால் அவனது கடை சமீபத்தில் மதீனா ஹைப்பர் மார்க்கெட் ஒன்றிருக்கும். அதன் வாசலிலே மாலை வேளயில் அமர்ந்துக்கொண்டு அக்கடைக்கு வருபவர்கள் கருப்பாக இவனை ஒத்திருந்தால் நம்மொழி பேசக்கூடியவராக தானிருக்கும். இவரிடம் நம் கடையைப்பற்றி சொல்லுவோம் போன் நம்பர் கொடுப்போம் என்று தினமும் ஒவ்வொருவரிடமும் கடை எண் கொடுத்த வண்ணமிருப்பான். அதே கடையில் இரண்டு தமிழ் வேலையாட்கள் வேலை செய்தார்கள். அட்டைப்பெட்டி அடுக்குவது, கடையின் துப்புரவு பணி போன்றவை அவர்கள் இருவரும் ஒரு வயிற்றில் பிறக்கவில்லை யென்றாலும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். மோசடி ஏஜென்ட் மூலமாய் விசிட் விசாவில் வந்து ஏமாந்துப்போய் பிறகு வேறொரு ஆள் மூலமாய் அட்டைப்பெட்டி மடிக்கிற அடுக்குகிற வேலை கிடைத்ததாம்.

தமிழ்மொழி பேசக்கூடிய மக்கள் எப்போதாவது தொலைப்பேசி வாயிலாய் அவனை அழைத்து மிகவும் குறைவான துணியை கொடுப்பர். அதுவும் தூக்கவே முடியாத கம்பளி, திரைச்சீலை போன்ற வகை. வியாபாரம் எந்தக் கடைக்கும் சரியில்லாமல் போனதினால் குறைவான தொகையையே முதலாளிகள் ஒருமித்த குரலோடு வசூலிக்க கட்டளையிட்டார்கள். அடிமாட்டு காசு மாதிரி ஆகிடிச்சு. துணிநிறையவே வரும். ஆனால் ஒரு ஆள் சம்பளம் மற்றும் கடை வாடகை கூட கொடுப்பது சிரமம் ஏற்ப்பட்டுவிட்டது. புதிய புதிய யுக்திகளை கையாள துவங்கினான். சொந்த ஊருக்கு திருட்டுத்தனமாய் பணம் அனுப்புகிற வேலை அதில் வரக்கூடிய கமிசன்,போன் ரிசார்ஜ்,திருட்டுத்தனமாய் இன்டர்நேஷினல் போன் காலிங் கார்டென, இதில் எதுவும் பெரிய வருமானத்தை தந்திடவில்லை.

சொந்த நாட்டிற்கே முடித்துப்போய் விடலாம் என்ற எண்ணம் தலைத்தூக்க ஆரம்பித்தது. ஏனென்றால் அவனுக்கு தூக்கமில்லை, ஓய்வில்லை, தான் தங்கியிருக்கும் அறை, உணவு,கடை வாடகை, ஆள் சம்பளம் இவையாவும் கடைக்கு வரக்கூடிய வருவாயிலிருந்து எடுக்க முடியாமல் பலருக்கு பதில் சொல்ல முடியாமல் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தான். வாரா வாரம் மதீனா ஹைப்பர் மார்க்கெட்டிற்கு தமிழ் இன இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரிடமும் அக்கடை வாசலில் அமர்ந்துக்கொண்டு பேச்சுக்கொடுத்து எந்த ஊர், எங்க இருக்கீங்க,

என்ன வேலைக்கு வந்துருக்கீங்க என நலம் விசாரிக்க விசாரிக்க வாரா வாரம் அவன் பேசுகிற ஒவ்வொரு இளைஞர்களும் ஒருமித்த கனத்த குரலோடு ஏஜென்ட் ஏமாத்திட்டான். 50 ஆயிரம் முதல் 1,10,000 வரை கொடுத்து ஏமாந்தவர்களை அவன் கண்டுக்கொண்டான். இன்னும் ஒரு சிலர் ஏதாவது ஒரு வேலை வாங்கிக்கொடுங்கண்ணா குடும்ப கஷ்டம், தங்கச்சி இருக்கு, வட்டிக்கு வாங்கிக்கொண்டு இங்க வந்தேன். 38 வயசாகுது எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல. ரெண்டு வருசம் இருந்து விட்டுப்போனால் செஞ்சிடலானு.500க்கு மேற்பட்டவர்கள் விதவிதமாக தங்களது மனச்சுமைகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள். வாரா வாரம் பார்த்த தமிழ் மனிதர்கள் தற்சமயம் அன்றாடம் பார்க்க ஆரம்பித்து விட்டான். அவர்களிடம் பேசும்போது அவனது கடையையும் விளம்பரம் செய்வான். எப்படியாவது அந்தக்கடை தோல்வியடையாமல் செல்ல வேண்டுமே. அப்போது தானே அவனது வயிற்று வலி தீரும் என்பதற்காய். அப்போது தான் இலங்கையை சேர்ந்த நூர்தீன் என்ற வாடிக்கையாளர் அறிமுகமாகி மிகவும் நெருக்கமாகி விட்டார். குமார், ரிஜ்வான், பாலு, ரமேஷ் இப்படி அடுக்கடுக்காய் நிறைய தோழர்கள் சேர்ந்தார்கள். வெளிநாடுகளில் வசிக்கிறவர்களுக்கு தோழரென்று யாருமில்லை. கதைப்படி தோழரென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் வெளிநாடு என்பது அகதிகள் முகாம் போலவே. எத்தனையோ ஆயிரம் மனிதர்களை இம்மூன்று ஆண்டுகளுக்குள் பார்த்துவிட்டோம். ஆனால் அவர்களெல்லாம் எங்கு சென்றார்கள் என்ன ஆனார்கள் என்பது விடுகதைப்போலவே.அதுவும் அவனை பலவீனப்படுத்தியது.

இலங்கை நண்பர் மட்டும் ஒரு ஹஜ் பெருநாளன்று இருவரும் பஜ்ர் தொழுகை, பெருநாள் தொழுகை தொழுதுவிட்டு கோல்டன் ஹவுஸ் உணவகத்தில் தோசை, வடை, பரோட்டா, கோழி குருமா ஒரு பிடிப்பிடித்து விட்டு இருவரும் நிறைய போட்டோ எடுத்துக்கொண்டு.அதன்பிறகு நூர்தீன் போன் சுவிட்ச் ஆஃப்.

தன்வீருக்கு திருமணம் இன்னும் ஆகவில்லை. பெண் தேடிக்கொண்டு குடும்ப மக்கள் அலைமோதுகிறார்கள். அதற்கிடையில் அவன் போன் செய்து வேலை பிடிக்கவில்லை, லீவ் இல்லை, வியாபாரமும் சரியில்லை என்றான்.கொஞ்ச நாட்கள் அப்படியே இரு பொண்ணுப் பார்த்துக் கொண்டிருக்கோம் கிடைச்சோன வந்துவிடு என சொன்னார்கள்.

அவன் ஒவ்வொரு நாளும் மன உளைச்சலோடுதான் நாட்களைக் கடத்தினான்.அவன் கண்ட தமிழ் மனிதர்கள் ஒவ்வொருவரும் காணாமல் போய் கொண்டிருந்தார்கள்.

திருமணம் வந்தால் மட்டுமே சொந்த நாட்டிற்கு செல்ல முடியு

மென்ற நிலைக்கு தள்ளப்பட்டான். சம்பளம் மாதா மாதம் சரியாக கிடைக்கவுமில்லை. எலி குதறி வச்சதுப்போலவே அவனது முதலாளி ஊதியம் தர அவற்றை கணிப்பொறியில் எழுதிய வண்ணமிருப்பான்.

ஒரு முறை முதலாளி சொந்த நாட்டிற்கு சென்றபோது இரண்டு மாதம் சம்பளம் பாக்கி ஆகிவிட்டதினால் மூன்று நாட்கள் இந்திக்காரன் வரவில்லை. சம்பளம் கொடுத்தாலே கொடு அப்போது தான் வருவேனென்று. அன்றைய தினம் சனிக்கிழமை. துணி மலைப்போல் குவிந்துவிட்டது. எல்லா வேலையும் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு அவனே செய்தான்.

முதலாளியிடம் சொன்னான் நடந்தவற்றை. அவருக்கு வேறொரு கம்பெனியும் உள்ளது அதிலிருக்கும் பணியாளர் மூலமாய் இருவருக்கும் பாதி சம்பளத்தை கொடுத்தார்.

வேலையும் சரியில்லை வருமானமும் இழுபறி என்ற நிலைக்கு அதிதீவிரமாய் சென்று கொண்டிருந்த போது தன்வீருக்கு பெண்கிடைத்து விட்டது.

முதலாளியிடம் பேசினான். கல்யாணம் வருகிறது ஊருக்கு செல்ல வேண்டுமென. அவர் சம்பளமாக விடுப்பட்டதை கொடுக்காமல் கிரடிட் கார்ட் கொடுத்து என்ன வேண்டுமோ வாங்கிக்கொள் என்றார். 6 மாதக்காலம் சிறுக சிறுக சேர்க்க ஆரம்பித்தான் சுபநிகழ்ச்சிற்கு கொண்டு செல்ல.

தன் சகோதரியிடம் நிலவரம் குறித்து விளக்கினான். என்ன கிடைக்கிறதோ அதைப்பெற்றுக்கொண்டு ஊர் வரலாம். அல்ஹம்துலில்லாஹி என்றாள்.

வேலை விடுவதுப்பற்றி பேசினான்.'நீ ஊர் வந்துவிடு. கல்யாணம் முடியட்டும். உனக்கு எங்கேயேனும் ஒரு நல்ல வேலை அமையும்' என்றாள்.

டிக்கெட் கொண்டு வந்து முதலாளி நீட்டினார்.'உன்னுடைய பாஸ்போர்ட் வெலிடிடி முடியப்போகிறது. ஊருக்கு போய்விட்டு ஒரே மாசத்துல வந்துப்புடனும். அங்க ரொம்ப நாள் இருக்கக்கூடாது' என்றார்.

கைச் செலவிற்கு கூட பணம் ஏதும் கொடுக்கவில்லை. வெறுங்கையோடு ஊர் வந்தடைந்தான். பீரோவில் பல லட்ச வங்கிக்கடன்கள், அட்டை வடிவத்தில் அவனது ஆயுளை குடிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

(முற்றும்)

**ஆக்கம்:– து.இர்ஃபான்**

# மாற்றம்

நறுமணம் இழந்த நங்கைகள் அவர்கள்
திருமணச் சந்தையில் விலை போகா
பருவம் கடந்த முதிர் சரக்குகள்
ஒரு மன மாற்றம் வந்தால் ஒளி விளக்குகள்

மணவிலக்குப் பெற்ற மங்கைகள் அவர்கள்
மறுமணம் செய்யும் ஆசைகள் எல்லாம்
மறுதலிக்கப்பட்ட அபாக்கியவதிகள்
ஒரு மன மாற்றம் வந்தால் அதிர்ஷ்டசாலிகள்

கணவனை இழந்த கைம்பெண்கள் அவர்கள்
துணையொன்றின்றித் துயருறும் அவர்கள்
இணையொன்று கண்டு வாழ்ந்திட வேண்டி
ஒரு மன மாற்றம் வந்தால் விடிந்திடும் விடியல்

இருப்பதற்கு இல்லையொரு இல்லமென
இல்லறம் மறுக்கப்பட்ட அபலைகள் அவர்கள்
இளைஞர்கள் எல்லாம் இதயங்கள் திறந்து
ஒரு மன மாற்றம் கொண்டால் ஒளிவிடும் மலர்கள்

கறுப்பான முகம் களையில்லை யதனால்
கல்யாண பந்தம் பகல் கனவாகும் - இங்கே
வெளுப்பான அகம் தேடும் ஒரு ஜீவன் வேண்டும்
ஒரு மன மாற்றம் வந்தால் பகல் கனவது நனவாகும்

உள்ளத்தில் வெள்ளை உள்ளவளைத் தேடும்
நல்ல மனம் படைத்த வாலிபர்கள் வேண்டும்
இளமை தீர முதுமை கூடிவரும் வழமை
இதையுணர்ந்த இதயங்கள் எப்போதும் வேண்டும்



மாடி மனை வீடும் கோடி பணம் புகழும்
கூட வரும் என்று நினைத்திடலாமோ
தேடும் செல்வம் எல்லாம் தீரும் ஒரு நாளில்
கூடும் அன்பு மட்டும்  கூட வருமே என்றும்

விதவையை மணக்க தபுதாரன் தேடும்
விதியினை உடைத்து வெளியேற வேண்டும்
நபிகளார் காட்டிய நல்வழி தொடரும்
நற்குணசாலிகள் நானிலத்தில் வேண்டும்

மணவிலக்குப் பெற்ற மங்கைய ருள்ளும்
மனமொன்றுண்டு அதையுணர வேண்டும்
இனிதான மறுவாழ்வு இவளுக்கும் சேர
இனியொரு விதி செய்திடத்தான் வேண்டும்

முதிர்கன்னி என்ற கொடுஞ்சொல்லை ஒழித்து
பதர் போல அவளை ஒதுக்குவதை விடுத்து
நிதமிங்கு வாழ்விழந்து தவித்திடா வண்ணம்
புது வாழ்வு அளிக்கும் ஒரு மாற்றம் வேண்டும்

**ஜெஸ்மின் றமீஸ் காத்தான்குடி**





# புருஷ லட்சணம்

-அஸ்மா ஜன் - கம்பளை

ஆளும் அவன் குடும்பம் வாழும்
நாளும் அவன் தோள் சுமக்கும்.
கால்கள் கைகள் கடிகார முட்களாகும்.
காலமும்  அவனும் கலந்து போகும்

தாய் மடியில் தொட்டில்.
தந்தை முதுகில் குதிரை.
சேயாய் காலம் முடிய,
சேர்ந்தே வருவது பொறுப்பு.

படிப்பு படிப்பு படிப்பு
பார்த்தே சமூகம் கேட்கும்.
உழைப்பு உழைப்பு உழைப்பு.
உலகம் அவனைத் துரத்தும்.

தாய் தந்தை அணைத்தே
தினமும்  பேண வேண்டும்.
தாரமும் தான் கொண்டாலே,
தரமாய் அவளைக் காக்க வேண்டும்.

பிள்ளை ஒன்று ஈன்று
பிதாவான பின்னே,
இல்லை என்று இயம்பாமல்
இனியும் இனியும் உழைக்க வேண்டும்

உழைத்துக் களைத்து அலுத்து,/
உலகில் வாழும் உன்னதம்/
உத்தம புருஷ இலட்சணம்/

நிலைத்தேயவர்  நிம்மதி தழைத்தோங்க/
நிதமும் அவர் தம்
நிழலில் வாழ்வோர் பிரார்த்திப்போம்.



# ஆளுமை அறிமுகம்

# நௌஷாத் காரியப்பர்

## (தீரன்)

**பிறப்பு**
05.09.1959

**பெற்றோர்**
ராசிக் காரியப்பர் – ஹறாஜரா

**இயற்பெயர்-**
றாசிக் காரியப்பர் முகம்மது நௌஷாத் காரியப்பர்

**எழுதும் பெயர்-**
ஆர்.எம். நௌஸாத்

**புனை பெயர்**
தீரன்.

**கல்வி**

*ஆரம்பக் கல்வி- கமு/ அல்.கமறூன் வித்தியாலயம், சாய்ந்தமருது. உயர்கல்வி- கல்முனை சாஹிறாக் கல்லூரி./ பேராதனை பல்கலைக்கழகம் ல் வெளிவாரி-றூ.பு.ஞ. முதல் வருடத் தேர்ச்சி.*

**தொழில்**

**அஞ்சல் அதிபர் நியமனம்.** *16.04.1984.-*
**சேவை புரிந்த நிலையங்கள்.**
*மட்டக்களப்பு- காத்தான்குடி- கல்முனை- அம்பாறை- ஒலுவில் - அக்கரைப்பற்று - அட்டாளைச்சேனை- சாய்ந்தமருது.*



## இலக்கியப் பிரவேசம்

**(படிகள்-சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலிலிருந்து.....)**

இவரின் இலக்கியப் பின்புலம் உருவான சூழலைக் கூறப்போனால், ஒரு குட்டி நூலகமாகவே இருந்த இவருடைய தாய்வீடுதான் இவரின் எழுத்துத் துறைக்கு வித்திட்டதாக கூறமுடியும்..இவர் வீட்டில் அனைவருமே வாசிப்பை நேசிப்பவர்கள்.

மேலும், பத்திரிகைகள், தின சரிகள் சஞ்சிகைகள் நூல்கள்.. என்று குவிந்திருந்த இவரது தாய்மாமனின் அறையில், திருட்டுத்தனமாக நுழைந்து, கையில் அகப்பட்டவற்றை திருடிக் கொண்டு வந்து, நெல் மூட்டைகளுக்குள் ஒளிந்திருந்து ஒரே மூச்சில் வாசித்து விடுவாராம். வீட்டில், "மின்னல்" என்ற ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்திக் கொண்டு பாராட்டும், ஏச்சும் வாங்கிக் கொண்டிருக்க, ஒரு சூழலில் இருந்துதான் தனக்குள் தமிழிலக்கியம் மீதான ஆர்வம் உருவானதாக எண்ணுகிறார்.

பின்னர், கல்முனை ஸாஹிறாவில், படித்துக் கொண்டிருந்த போது, 1975ல் பாடசாலை வெளியீடான அம்பு சஞ்சிகைக்கு ஒரு வாசகர் கடிதம் எழுதியதன் மூலம் ஸாஹிரா இலக்கியப் பண்ணையில் இணைந் திருக்கிறார். அப்புறம், பரவலாக, சில பத்திரிகை, சஞ்சிகைகளில் துணுக்குகள், கேள்வி பதில்... உரு வகக் கதை,குறுங்கதை, ஒன்றிரண்டு சிறுகதைகள்,என பக்க வேர்கள் விட்டு நிலை கொண்டதாகச் சொல் கிறார்.

இவரது முதல் சிறுகதை, 'தீண்டத் தகாத கரங்கள்' என்பதாகும். இது, 1982 இல், மித்திரன் வாரமலர் நடத்திய பாரதி நினைவுச் சிறு கதைப் போட்டியில், பிரசுரத்துக்கு தகுதி பெற்ற கதையாக தெரிவு செய்யப்பட்டு பிரசுரமானது.

## இயங்கிய துறைகள்

கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, நாடகம் சஞ்சிகை வெளியீடு என்பனவாகும்.

## வெளியீடுகள்

### கவிதைத் துறை

1. **தூது**
   கையடக்கக் கவிதைச் சிற்றேடு. 16 இதழ்கள். கல்முனை புகவம் வெளியீடு- 1983
2. **அபாயா என் கறுப்பு வானம்**
   கவிதைகள் - மின்னூல் . தமிழ்நாடு பிரதிலிபி வெளியீடு 2015

3. **ஆழித்தாயே அழித்தாயே -**
சுனாமி கடற்கோள் காவியம்-
அபாபீல்கள் வெளியீடு-2017

4. **குறு நெல்**
குறும்பாக்கள்- பாவலர்
பண்ணை வெளியீடு -2017

5. **முத்திரையிடப்பட்ட மது**
சாய்ந்தமருது அபாபீல்கள்
வெளியீடு - 2021

## சிறுகதைத் தொகுப்புக்கள்

1. **வல்லமை தாராயோ**
சிறுகதை தொகுதி - கல்முனை
புகவம் வெளியீடு--2000

2. **வெள்ளிவிரல்**
சிறுகதை தொகுதி - தமிழ்நாடு
காலச்சுவடு வெளியீடு - 2011
2011 க்கான அரச தேசிய
சாகித்திய விருதும்,
கிழக்குமாகாண சாகித்திய
விருதும் பெற்றது.

3. **தீரதம்**
சிறுகதை தொகுதி
ஜீவநதி வெளியீடு- 2017

## நாவல்கள்

1. **நட்டுமை**
தமிழ்நாடு காலச்சுவடு
சஞ்சிகை, நடத்திய சு.ரா.
75 நாவல் போட்டியில்
முதற் பரிசு பெற்றது.
காலச்சுவடுவெளியீடு-2009

2. **கொல்வதெழுதுதல் 90**
2013க்கான தமிழ்நாடு
அரசின் 1000
பிரதிகளுக்கான நூலக
ஆணை பெற்றது.
காலச்சுவடுவெளியீடு-2013

3. **வக்காத்துக்குளம்**
அக்கினிக்குஞ்சு இணையம்
நடத்திய அமரர் எஸ் .பொ.
ஞாபகார்த்த குறு நாவல்
போட்டியில் மூன்றாவது பரிசு
பெற்றது
ஏறாவூர் கசல் பதிப்பக வெளியீடு
-2021

4. **வானவில்லே ஒரு கவிதை கேளு**
ஈழநாதம் வார இதழில்
தொடராக வெளிவந்தது.
சாய்ந்தமருது அபாபீல்கள்
வெளியீடு - 2005

5. **ஆமீன்**
(நெடுங்கதை) சாய்ந்தமருது
அபாபீல்கள் வெளியீடு. - 2023



## பத்தித் தொடர்கள்

1. **ஒரு சிற்றெறும்புக்கும் நிழல் இருக்கிறது..**
   பாவலர் பஸில் காரியப்பரின் படைப்புலகில் சஞ்சரித்தல் விடிவெள்ளி வார இதழில் தொடராக வெளியானது-- 2009
2. **விழித்திரையில் விரியும் வெண்திரை**
   ஆங்கில திரைப்படங்கள் அறிமுகம் நல்லுறவு மாசிகையில் தொடராக வெளி வந்தது - 2009

## வானொலி நாடகங்கள்

1. **காகித உறவுகள்.-- 1987-1989**

*இறுவட்டு- இலங்கை வானொலி முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பான 12 வானொலி நாடகங்களின் தொகுப்பு.*

*பிரான்ஸ் தமிழ் ஒலிபரப்பு நிறுவனமும், தினக்குரல் பத்திரி கையும் இணைந்து நடத்திய அகில உலக வானொலி நாடகப் போட்டியில் 3ஆவது பரிசுபெற்ற காகித உறவுகள் என்னும் நாடகமும் முஸ்லீம் சேவையில் சுமார் 20 க்கும் மேற்பட்ட தடவைகள் ஒலிபரப்பப்பட்ட ஒரு கிராமத்தின் கவிதை என்ற நாடகமும் உள்ளடங்கியது.*

## எழுதி ஒலிபரப்பான வானொலி நாடகங்கள்

**25.05.1988.** நினைப்பது ஒன்று!

**23.06.1988.** வாக்கு.

**30.08.1988.** ஒரு கிராமத்தின் கவிதை. (இது 20 க்கும் மேற்பட்ட தடவைகள் மீள் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.)

**01.1989.** இங்கும் ஒரு தாஜ்மஹால்.

**13.08.1989.** காகித உறவுகள்.

1998ம் ஆண்டில் பிரான்ஸ் தமிழ்ஒலி நிறுவனம் இலங்கை தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து சில்லையூர் செல்வராசன் ஞாபகார்த்தமாக நடத்திய வானொலி நாடகப்போட்டியில் ( காகித உறவுகள்) மூன்றாம் பரிசாக ரூபா. 25000 மற்றும் சான்றிதழ் பெற்றது.

**08.05.1990.** சீட்டுக்காசு.

**23.08.1990.** துயரங்களும் ஓய்வதில்லை.

**23.10.1990.** களவெட்டி.

1991ல் நிகழ்ந்த கல்முனைத் தமிழ் மொழித்திறன் விழாவில் இந்நாடகத்தைப் பின்னணி ஒலிபரப்பாகக் கொண்டு மேடையேற்றப்பட்டு கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி மாணவிகளால் நடிக்கப் பட்டு முதற்பரிசு பெற்றது.

**16.02.1993.** உறுதி.

**04.10.1999** ஆரத்திக் கல்யாணம்.

**....07.1999.** ஓட்டம்.

## சஞ்சிகை வெளியீடுகள்

**தூது.**

*கவிதைச் சிற்றிதழ்--- 1983 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் 16 இதழ்கள் வெளியிடப்பட்டது. (பிரதம ஆசிரியர்)*

**பாதா**

றோணியோ சஞ்சிகை. 1985- (ஆசிரியர்)

**இன்னாலில்லாஹி..**

தமிழ்/முஸ்லிம் இனக்கலவரத்தில் கொல்லப்பட்டோருக்கான அஞ்சலிக் கவிதைகளின் தொகுப்பு. றோணியோ அச்சு - 1989 - (தொகுப்பாசிரியர்)

**வாஷிங்டன் கனவு**

பாலஸ்தீன்-இஸ்ரேல் சமாதான ஒப்பந்தம் மீதான கண்டனக் கவிதைகளின் தொகுப்பு- 1993ல் (தொகுப்பாசிரியர்)

**புள்ளி**

ஈழத்தின் முதல் ஹைக்கூ கவிதைச் சஞ்சிகை. - 1993-- (நிர்வாக ஆசிரியர்)

**இரண்டாவது பக்கம்**

நவீன கவிதைகளின் சஞ்சிகை- 2002 ல் உதவி ஆசிரியர்.

## விருதுகள்

**2004 ஜூன் 06. சிறந்த கவிஞருக்கான விருது.**

தினச்சுடர் பத்திரிகையின் மாபெரும் அறிமுக விழாவும் தேசிய விருது வழங்கும் வைபவமும். கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியில் நிகழ்ந்த போது..

**2007 - சிறந்த எழுத்தாளருக்கான விருது.**

சாய்ந்தமருது ஃபிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக்கழகம் அதன் வெள்ளிவிழாவை ஒட்டி 2007.06.30.ல் நடத்திய 25வது ஆண்டு விழா.

**2011ன் அரச தேசிய சாஹித்திய விருது**

வெள்ளிவிரல் சிறுகதைத் தொகுதி- 10.09.2012 வியங்கொட தேசிய கல்வியியல் கல்லூரி

**2012 கிழக்கு மாகாண சாகித்திய விருது.**

வெள்ளிவிரல் சிறுகதைத் தொகுதி-

2012.10.18 திருகோணமலை விவேகானந்தா வித்தியாலயம்.

இலக்கிய உலகில் இவரின் பங்களிப்பு பாரிய அளவில் இருந்து வருகிறது என்பது தமிழ் தெரிந்த அனைவரும் பெருமிதம் கொள்ளக்கூடிய விடயமாகும்.

இவரின் எழுத்துப் பணிகள் தொடர முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

**தகவல் S.U. கமர்ஜான் பீபீ**



# வெளியீடு செய்துள்ள நூல்கள்



பிரான்ஸிலிருந்து தமிழ் முழங்கும்

# தமிழ்நெஞ்சம்

**படியுங்கள்**
**பகிருங்கள்**



**இணையத்தில் படிக்கலாம்**
**tamilnenjam.com**
**முற்றிலும் இலவசம்**



நீங்களும் எழுதலாம்
e-mail :
editor@tamilnenjam.com

